DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
iHOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan Sales Representative

இவ்விடத்தில்
விளம்பரம் செய்ய எம்மை
அழையுங்கள்
416 – 752 – 1524

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 905-201-9977
என்னை அழையுங்கள்

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship
Super visa for parents and grandparents including health insurance
Citizenship
Permanent resident card renewal
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

Residential & Commercial Real Estate Services
Bala Logendralingam
Realtor
Cell: 647-447-1562
RE/MAX COMMUNITY

29ம் ஆண்டில்...
29 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1532
CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM
Friday August 15, 2025

# "இளைய தலைமுறையினருக்கு திருக்குறள் மீதான தேடலை ஏற்படுத்த கனடாவில் நடைபெறவுள்ள "அனைத்துலக திருக்குறள் மாநாடு" வழிவகுக்கும் என்ற நம்பிக்கையோடு செயற்படுகின்றோம்"



## செப்டம்பர் 2025 ல் ஸ்காபுறோ வளாகத்தில் நடைபெறவுள்ள "அனைத்துலக திருக்குறள் மாநாடு" தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பில் வைத்திய கலாநிதி லம்போதரன் தெரிவிப்பு

"கனடாவில் மாத்திரமல்ல உலகின் பல நாடுகளில் வாழும் எம் இளைய தலைமுறையினருக்கு திருக்குறள் மீதான தேடலை ஏற்படுத்த வேண்டும் என்பதோடு திருவள்ளுவர் எமக்காக படைத்தளித்த இந்த உலகப் பொதுநூலின் உள்ளடக்கங்களையும் கருத்துச் செறிவுகளையும் அவர்கள் கற்றுணரவேண்டும் என்பதும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 19ம், 20ம், 21ம் திகதிகளில் கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள ரொறன்ரோ பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ள "அனைத்துலக திருக்குறள் மாநாடு" வழிவகுக்கும் என்ற நம்பிக்கையோடு கனடாவில் இயங்கிவரும் மாநாட்டுக் குழுவினராகிய நாம் செயற்படுகின்றோம். (தொடர்ச்சி 14ம் பக்கம்)

# யுகம் வானொலி மற்றும் தொலைக் காட்சி நிறுவனத்தின் புதிய கலையகத் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது

ஸ்காபுறோவில் பல ஆண்டுகளாக கலைஞர்கள் கணபதி ரவீந்திரன் மற்றும் ரூபி யோகதாசன் ஆகியோரின் நிர்வாகத்தின் கீழ இயங்கிவரும் "யுகம் வானொலி" மற்றும் தொலைக் காட்சி நிறுவனத்தின் புதிய கலையகத் திறப்பு கடந்த 9ம் திகதி சனிக்கிழமை ஸ்காபுறோவில் மிடில்பீல்ட் மற்றும் பின்ச் வீதிச் சந்திப்புக்கு அருகில் உள்ள கட்டடத்தில் விழா சிறப்பாக நடைபெற்றது.

கலை இலக்கிய நண்பர்கள் மற்றும் வர்த்தகப் பெருமக்கள் சமூகச் செயற்பாட்டாளர்கள் மற்றும் ஊடக நண்பர்கள் என நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து சிறப்பித்த இந்த அழகிய வைபவத்தில் திறப்பு விழாவையொட்டிய "கேக்" வெட்டும் வைபவத்தில் **East FM** 102.7 வானொலி நிலைய அதிபர் நடா ராஜ்குமார் அவர்கள் வைபவத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வதையும் அருகில் "தமிழழகன்" வி. என். மதியழகன் மற்றும் வானொலி நிலையத்தின் சக கலைஞர்கள் பலர் கூடி நிற்பதையும் காணலாம். (படம்:ஜீரிஏ வீடியோ-கெங்கா)



சிறு கற்கள் கொண்டு பெரும் சரித்திரம் படைப்போம்.
சிறு துளி பெரு வெள்ளம்
நாம் ஒன்றாய் சேர்ந்து கட்டி முடிப்போம்..
தமிழ் சமூக மையம் Tamil Community Centre

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

அதிவிரைவான அகதிக்கோரிக்கை விண்ணப்பங்கள் உள்ளடங்கலான சகலவிதமான Immigration சேவைகளுக்கும்
Prime Legal Services
(Eraa Supermarket Plaza)
5928 Finch Avenue E, Unit 231
905-334-6851

VILLAGE NISSAN

தமிழ் பேசும் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் நாம் பெருமையடைகிறோம்

# ALL-IN CLEAROUT EVENT






**SajanthanVijayakumar**
Brand Ambassador
647.631.9054
saj@villagenissan.com

VILLAGE NISSAN
25 South Unionville Ave,
Unionville, ON L3R 6B8
www.villagenissan.com



**Prajath Nageswaran**
Brand Ambassador
416-879-7410
Prajath@villagenissan.com






C.Y.E.C.S

உலகத் தமிழ் பண்பாட்டு இயக்கத்தின் கனடாக் கிளையும்
Centre for Youth Empowerment and Community Services அமைப்பும் இணைந்து நடத்தும்

# 'உங்களோடு இசைக்கவி ரமணன்'





மொழியும் கலையும் கவிதையும் சங்கமிக்கும் ஒரு மாலைப் பொழுது

இடம்: பைரவி நுண்கலைக் கூடம் - கலையரங்கம்
27 Casebridge Ct. Unit 5, Scarborough, ON M1B 4Y4
காலம்: 30-08-2025 சனிக்கிழமை மாலை 4.00 மணிக்கு





**வாழ்த்துரைகள்:**
கலாநிதி இளையதம்பி பாலசுந்தரம் அவர்கள்
(காப்பாளர். உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்க்ம் - அகிலச் செயற்குழு)
சிவா கணபதிப்பிள்ளை அவர்கள்
(அகிலச் செயற்குழுத் தலைவர் - உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம்)

**கவியரங்கம்:** தமிழர் பண்பாட்டைப் பேணி.
தரணியில் உயர்ந்திடுவோம்!
**தலைமை:** பாவலர் இராஜ்மீரா இராசையா
**பங்குபெறும் கவிஞர்கள்:**
1) பாவலர் சி. சண்முகராஜா
2) பாவலர் அகணி சுரேஷ்
3) பாவலர் பவானி தர்மகுலசிங்கம்
4) பாவலர் சயந்தன் பசுபதி
5) பாவலர் மதிபாஸ்கரன் கணபதிப்பிள்ளை

"கவிஞர் கண்ணதாசனும் நாமும்"
உரையும் இசையும் கலந்து வழங்குபவர்
'இசைக்கவி ரமணன்'

"இசைக்கவி ரமணன்" அவர்களை சபையோருக்கு அறிமுகம் செய்தல்:
திரு. சிவன் இளங்கோ
(சமூகச் செயற்பாட்டாளர். ரொறன்ரோ பல்கலைக் கழக "தமிழ் இருக்கை" மற்றும் ஹாவர்ட் பல்கலைக் கழக தமிழ் இருக்கை ஆகியவற்றை நிறுவுவதில் கனடாவில் முக்கிய பங்கு வகித்தவர்)

அனைவரும் வருக! அனுமதி இலவசம்!
மேலதிக விபரங்களுக்கு: (416) 732-1608 | (416) 899-6044 | (647) 891-7725

Canada
We acknowledge the financial support of the Government of Canada

Single Copy $1 Annual Subscription Price $52.00

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Arjune
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# அன்று முதல் இன்றுவரை அகிலத்திற்கு உதவாத "அமெரிக்கா" என்னும் "கழுகரசு"

கடந்த 70 வருடங்களுக்கு மேலாக அமெரிக்கா என்னும் "கழுகரசு" பார்க்கும் வேலை எதுவென்பதை உலக அரசியலை அவதானிப்பவர்களுக்கு நன்கு புரிந்த ஒன்றாகவே இருக்கும். அதுவும். கடந்த கால உலக அரசியலை குறிப்பாக வியட்னாம் என்னும் வீரம் செறிந்த நாட்டின் மீதும் அந்த தேசத்தின் மக்கள் மீதும் கால்நூற்றாண்டு காலமாக இந்த "கழுகு" நடத்திய பாரிய தாக்குதலானது ஒரு மில்லியனுக்கும் அதிகமான வியட்னாமிய மக்களையும் இன்னும் அமெரிக்காவின் பலம் வாய்ந்த இராணுவத்திறகு எதிராகப் போராடிய மக்களையும் கொன்று குவித்தது என்பதை அறிகின்றபோது அல்லது மறுபடியும் மறுபடியும் மற்றவர்கள் ஞாபகப்படுத்தும் போதும் எமக்கு இந்த "கழுகு"த்தேசத்தின் மீது உள்ள கசப்புணர்வை மேலும் அதிகரித்த வண்ணமே இருக்கும் என்பதும் திண்ணமே!.
கடந்த அரை நூற்றாண்டு காலப்பகுதிகளில் மற்றைய நாட்டு விவகாரங்களில் "மூக்கை நுழைப்பதும்" புரட்சிகர சிந்தனை கொண்ட போராளிகள் தங்கள் நாடுகளில் உள்ள மக்கள் விரோத ஆட்சியாளர்களுக்கு எதிரான ஆயதப் போராட்டங்களை நடத்தும் போது அவ்வாறான நாடுகளில் மக்கள் விரோத ஆட்சியாளர்களை காப்பாற்றும் வகையில் படைகளையும் ஆயுதங்களையும் அனுப்பி மக்கள் எழுச்சிகளை அடக்குவதும அமெரிக்காவின் ஒரு மக்கள் விரோத செயற்பாடாக விளங்கியது.

இவ்வாறான ஒரு தாக்குதல்தான் தொடர்ச்சியாக அல்லாமல். அவ்வப்போது வியட்னாம் தேசத்தில் இடமபெற்றது என்பதை வரலாறுகளைப் படிக்கும் போது அந்த தேசத்து மக்கள் அனுபவித்த கொடுமைகளின் கதைகள் எமக்கும் கண்ணீரை வரவழைக்கும் வலிமை கொண்டது. 1954ம் ஆண்டு ெ தொடக்கம் 1975ம் ஆண்டுவரை வியட்னாம் மக்களுக்கு எதிராக ஆட்சி செய்த மன்னனைக் காப்பாற்றும் வகையில் அந்த கொடிய ஆட்சியை தக்கவைக்கும் முயற்சியில் அமெரிக்கப் படைகள் அப்பாவி வியட்னாமியர்களை கொன்றது.

ஆனால் வியடனாமில் கற்றுக் கொண்ட பாடங்கள் அமெரிக்கா வாயடையடைத்து நின்றதாக பல வருடங்கள் கழிந்து செல்லவும் மீண்டும் "முருங்கை மரங்களில்" ஏறிக்கொண்டது. இந்த வரலாறு ஒரு புறம் இருக்க நாம் தற்போதைய "பேசு பொருளாக" உள்ள ட்ரம் நிர்வாகத்தின் "பொருளாதாரப் போர் பற்றி சிறிது பேசலாம் என்று எண்ணுகின்றோம்.

பல ஆண்டுகளாக உலகின் பல பிராந்தியங்களுக்கு கால்களை எடுத்து வைத்து இராணுவ யுத்தங்களை மேமற்கொண்டு வந்த அமெரிக்கா என்னும் "கழுகு" தற்போது பொருளாதார யுத்தத்தை செய்யத் தயாரிவிட்டமை வெளிப்படையாகவே தெரிகின்றது. அமெரிக்காவின் தற்போதைய இறக்குமதியாகும் பொருட்களுக்கான வரிவிதிப்பு என்பது உலகின் சுமார் 90 நாடுகளைப் பாதிக்கின்றது என்பதை அறிகின்றபோது ட்ரம் என்னும் ஆளுமையில்லாத ஒரு தலைவனை தேர்ந்தெடுத்த அமெரிக்க மக்கள் மீதுதான் அனுதாபம் தோன்றும். உலகில் பொருளாதாரத்தில் உயர்ந்து நிற்கும் பல நாடுகளைப் பாதிப்படையச் செய்யும் போக்கு கொண்டவையாக ட்ரம் என்னும் ஜனாதிபதியின் வரிவிதித்தல் அறிவிப்பு பாதிப்பை ஏற்படுத்தும் என அச்சமடைவதை நாம் பார்க்கின்றோம். கனடா, இந்தியா போன்ற நாடுகள் விட்டுக் கொடுக்கும் போக்கு கொண்டு சமரசம் செய்து கொள்ளலாம் என்று காத்திருந்த பொழுதுகள் அனைத்தும் வீணாகி விட்டன என்ற விமர்சனங்கள் கனடாவிலும் இந்தியாவிலும் வெளிவந்துகொண்டிருக்கின்றன.

நாம் முன்னர் குறிப்பிட்டுள்ள அமெரிக்காவின் இராணுவ படையெடுப்பு வியட்னாம் தேசத்தின் மீது திணிக்கப்பட்டிருந்த போதும் மக்கள் அதிகளவில் கொல்லப்பட்டுக்கொண்ருந்த போதும் 1970ம் ஆண்டளவில் கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த அப்போதைய இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மீது யாழ்ப்பாணத்தில் இடதுட சாரித் தோழர்கள் முட்டைகளை வீசி எறிந்து தங்கள் எதிர்ப்பைக் காட்டினார்கள். ஆனால் தற்போது உலகின் எந்த நாட்டிலும் அமெரிக்க அதிபர்களுக்கு எதிர்ப்பைக் காட்டும் துணிச்சலான முயற்சிகள் எதுவும் நடப்பதில்லை.

அமெரிக்காவின் மக்கள் விரோத மற்றும் பிற தேசங்களின் சொந்தப் பிரச்சனைகளில் தலையிடுவது போன்ற விடயங்கள் இன்னும் தொடர்ந்த வண்ணமே உள்ளன. உதாரணமாக தற்போதைய மக்களும் பெருமளவு சொத்துக்களும் அரச உடமைகளும் அழிக்கப்பட்டு வரும் பாலஸ்ததீனம் மற்றும் உக்ரைன் ஆகிய நாடுகளில் முறையே இஸ்ரேல் மற்றும் ரஸ்யா ஆகிய நாடுகள் நடத்தி வரும் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு "எண்ணை ஊற்றும் வேலையையே" அமெரிக்கா தொடர்ச்சியாக நடத்திக்கொண்டிருக்கின்றது.

ஆனால் மக்கள் இலட்சக் கணக்கில் அநியாயமாகக் கொல்லப்படுவதும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் மக்கள் படுகொலைகளுக்கு காரணமாக ஆட்சியாளர்களை கண்டிக்ககாமல் அப்பாவிகள் கொல்லப்படும் பக்கத்தைப் பார்த்து தனது கண்டனத்தை தெரிவிக்கும் அமெரிக்காவின் கபடத்தனம் உலகை இன்னும் கீழ் நிலைக்கு கொண்டு செல்லும் என்பதும் உலகின் பல நாடுகள் பொருளாதார துறைகளில் பள்ளத்தை நோக்கி செல்லும் செய்திகள் எமக்கு வாசிப்புக்காக வரலாம் என்பதையும் நாம் இவ்வாரம் பகிர்ந்து கொள்கின்றோம்!

## அராலி கலாச்சார ஒன்றியம் — கனடா

அராலி கலாச்சார ஒன்றியத்தின் வருடாந்த கோடைகால ஒன்றுகூடலும் பொதுக்கூட்டமும் எதிர்வரும் ஆகஸ்ட் 17ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணிக்கு வழமைபோல் **Sunnybrook Park** ல் உட்றம **Serina Gundy Park Area** 3 ல் நடைபறவுள்தால் சகல அங்கத்தினரையும் அராலி ஊர் மக்களையும் நலன் விரும்பிகள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
தொடர்புகளுக்கு: செல்வரண்கம் 647-828-4614 இரவிநேசன் 647-464-9568 உருத்திரன் 647-294-6863 தனராஜா 416-725-8569 ரூபா 416-797-5896

கட்டுடை மருதமன்றம் கனடா, நடாத்தும்

**கோடைகால ஒன்றுகூடல் — 2025**

திகதி: Sunday, August 17, 2025
இடம்: Neilson Park - Scarborough
1555 Neilson Rd
Toronto, ON M1B 5Z7
Main Intersection: Neilson Road & Finch Avenue E.
நேரம்: 10.00 AM - 4.00 PM

எமது ஊரின் உறவுகளை அன்புடன் அழைக்கிறோம்!

**உங்கள் வீட்டை புதுப்பிக்க வேண்டுமா?**



**Legalize your basement now!**

* Basements
* Bathrooms
* Kitchen
* Flooring
* Accent Walls
* Painting
* Custom Closets



Coverall Group Inc.
Contact: Siva 416-706-8160

**Job Vacancies - Markham Development Project**

**Applications are invited for following Job Vacancies at a Development Project in Markham immediately.**
*** Sales & Administration * Helpers/ Labourers**
**Successful Applicants should be required to work at Markham Project office.**
**Contact: 437.601.0450 or Email: sales@gritdevelopments.com**

இலங்கை செய்திகள் Sri Lanka News

# சுமந்திரன்: தமிழர் தேசியப் போராட்டத்திற்கு ஒரு மறைமுக அபாயம் தமிழர்கள் எதற்கு விழிப்புடன் இருக்க வேண்டும்?

- ஈழத்து நிலவன்

சுமந்திரனது அரசியல் மேடை மற்றும் பொய்யான தோற்றங்கள்

தமிழர் அரசியல் மேடை கடந்த பல தசாப்தங்களாகவே சிங்கள அரசுகளின் அழுத்தத்திலும், சர்வதேச நெருக்கடிகளிலும், உட்பகை அரசியலிலும் சிக்கிக் கிடக்கிறது.

இந்த மேடையில் ஒரு “மிதமான குரல்” போல தோன்றி, தனது சட்டவாதத் திறமையாலும், மென்மையான பேச்சுத் திறனாலும், வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு அரங்குகளில் தமிழரின் சார்பாக பேசுவதாக சித்தரிக்கப்பட்டவர் தான் எம்.ஏ. சுமந்திரன்.

ஆனால், இந்த “மிதமான குரல்” என்பது உண்மையில் தமிழர் தேசியக் கனவை நிசப்தமாகக் குலைக்கும், சிங்கள பாசிச ஆட்சிக்கு இடைவிடாமல் சாதகமாக செயல்படும் ஒரு அரசியல் கருவி என வரலாற்று நிகழ்வுகளும், அவரின் அரசியல் நடைமுறைகளும் நிருபிக்கின்றன.

சுமந்திரனின் அரசியல் பின்னணி மற்றும் உண்மையான முகம்

2009-க்கு முன்பும் பின்னரும், சுமந்திரன் எப்போதும் தமிழர் பிரச்சனையை நேரடியாக எதிர்கொள்ளாத ஒரு வழியைத் தேர்ந்தெடுத்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவைக்கு அனுப்பப்பட்ட, தமிழர் இன அழிப்பு தொடர்பான கடிதத்தில் அவர் கையொப்பமிட மறுத்தது - இது அவர் எந்த தரப்புக்கு உண்மையில் விசுவாசமுள்ளவர் என்பதற்கான முதல் வெளிப்படையான சான்றாகும்.

வடகிழக்கில் நிலவும் இராணுவ மயமாக்கல் குறித்து அவர் பேசினாலும், தனது அரசியல் வாழ்நாளில் இராணுவத்தின் நிழலில் பயணித்தவர் என்பதும் மறுக்க முடியாத உண்மை.

தமிழர் தேசிய அபிலாசையின் நிர்மூலம் (பலவீனப்படுத்துதல்)

சுமந்திரனின் செயல்கள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தமிழர் விடுதலை, தன்னாட்சி, அரசியல் பாதுகாப்பு ஆகிய இலக்குகளைச் சிதைக்கின்றன.
அவர்:

சிங்கள பாசிச அரசுகளின் அடிவருடியாக சர்வதேச அரங்குகளில் தமிழர் போராட்டத்தை மிதமாக்குகிறார்.

“உடன்பாடு”, “சமரசம்” என்ற பெயரில் தமிழர் கோரிக்கைகளை தளர்த்துகிறார்.

போர்க்குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்கு நீதி கேட்கும் கோரிக்கையை அரசியல் பேச்சுவார்த்தையின் ஒரு சாதாரண பிரச்சனையாகக் குறைப்பவர்.

இவ்வாறு அவர் தமிழர் தேசிய அபிலாசையை “மென்மையான அரசியல்” என்ற போர்வையில் முற்றிலும் நிர்மூலமாக்கும் பணி செய்து வருகிறார்.

போர்க் குற்றங்கள் மற்றும் இனப்படுகொலைக்கான கோரிக்கைகளை வெறும் அரசியல் விவாதங்களாக மாற்றுகிறார்.

இவ்வாறு, சுமந்திரன் மிதவாத அரசியல் என்ற போர்வையில் தமிழ் தேசிய லட்சியங்களை முற்றிலுமாக மட்டுப்படுத்துகிறார்.

கடையடைப்பு போராட்டம் - மக்கள் நம்பிக்கையா? அரசியல் நாடகமா?

சுமந்திரன் அறிவித்த கடையடைப்பு போராட்டம் ஒரு உண்மையான மக்கள் எழுச்சியா, அல்லது அரசியல் பிரச்சாரமா என்பது கேள்விக்குறி.

அவர் 2009-க்கு முன் கொழும்பிலேயே இருந்தபோது, தமிழர் இன அழிப்பு நடந்துகொண்டிருந்தபோது ஏன் இப்படியான போராட்டங்களை முன்னெடுக்கவில்லை?

இப்போது MP அல்லாத நிலையில், தன் அரசியல் இமேஜை மீட்டெடுக்கவும், கட்சியின் வீழ்ச்சியை தடுப்பதற்கும் மக்களின் உணர்ச்சியை மீண்டும் பயன்படுத்தும் முயற்சி மட்டுமே இது ஒரு அரசியல் முக்கியத்துவத்தை மீண்டும் பெற மக்கள் உணர்வுகளை கையாளும் முயற்சியாக தெரிகிறது.

தமிழர்கள் ஏன் சுமந்திரனை நம்பி பயணிக்கக் கூடாது?

1) வரலாற்று ஆதாரங்கள் - சுமந்திரனின் கடந்தகால நிலைப்பாடுகள் எப்போதும் சிங்கள அரசின் நலன்களுக்கே ஆதரவாக இருந்துள்ளன.

2) செயல்-சொல் முரண்பாடு - இராணுவ மயமாக்கலை எதிர்க்கிறார் என்றாலும், இராணுவ பாதுகாப்புடன் செயல்படும் பழக்கத்தை விட்டு விலகவில்லை. தமிழர் மண்ணில் இராணுவத்தின் கட்டுப்பாட்டை அவர் ஒருபோதும் தீவிரமாக எதிர்க்கவில்லை.

3) தேசிய இலக்கு சிதைவு - அவரது அரசியல் முறை விடுதலை, சுயாட்சி மற்றும் நீதி என்ற தமிழர்களின் மூன்று அடிப்படைக் கோரிக்கைகளையும் பலவீனப்படுத்துகிறது.

4) சமூக பிளவு - அவரது அரசியல் அணுகுமுறை தமிழர் ஒற்றுமையை பலவீனப்படுத்துகிறது. அவரது அரசியல் தமிழர் ஒற்றுமையைக் குலைத்து, முக்கிய பிரச்சினைகளில் இருந்து கவனத்தைத் திசை திருப்புகிறது.




தமிழர் அரசியலில் விழிப்புணர்வின் அவசியம்

தமிழர் சமூகத்துக்கு இன்றைய நிலையில் மிக அவசியமானது விழிப்புணர்வான அரசியல் தீர்மானம்.

சுமந்திரன் போன்றவர்கள் இனி ஒருபோதும் “தமிழர் விடுதலை குரல்” எனக் கருதப்படக் கூடாது. சுமந்திரன் போன்றவர்கள் தமிழர் விடுதலைக்கான நியாயமான பிரதிநிதிகள் அல்ல என்பதை உணர வேண்டும்.

மக்களின் நம்பிக்கையைப் பயன்படுத்தி, அவர்களை தவறான பாதையில் அழைத்து செல்வது இன அழிப்பின் ஒரு புதிய வடிவம்.

அரசியல் தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதும் ஆதரிப்பதும் அவர்களின் செயல் பட்டியல் மற்றும் தமிழர் உரிமைகளுக்கான உண்மையான அர்ப்பணிப்பை, அவர்களின் கடந்த கால செயல்பாடுகளை அடிப்படையாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

எம் இனத்தின் எதிர்காலத்தை பாதுகாக்க வேண்டிய அரசியல் தீர்மானம்

சுமந்திரன் மற்றும் அவரைப் போன்ற அரசியல் முகங்கள், தமிழர் தேசிய போராட்டத்தின் அடித்தளத்தை அமைதியாக சிதைத்து அழித்து வருகின்றனர்.

இவர்கள் “மிதமான பேச்சாளர்கள்” போலத் தோன்றினாலும், உண்மையில் தமிழர் எதிர்காலத்தை சிங்கள பாசிச ஆட்சியின் கைகளில் ஒப்படைக்கும் வியூகத்தை பின்பற்றுகின்றனர்.

தமிழர்கள் இனி, வரலாறு கற்றுக் கொடுத்த பாடங்களை மறக்காமல், உண்மையான விடுதலை, நீதி, தன்னாட்சி ஆகிய இலக்குகளை முன்னெடுக்கும் தலைவர்களையே ஆதரிக்க வேண்டும்.

அப்படிச் செய்யாவிட்டால், எதிர்கால தமிழர் அரசியல் மீண்டும் சுமந்திரன் போன்றோரின் கைகளில் சிக்கி, தேசிய அபிலாசை என்றென்றும் மாய்ந்து போகும் அபாயம் உள்ளது.

Tamilthakaval.org

**ஒரு இலவச சேவை -- A Free Service**




இவ் இணையத்தளம் உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழ் மக்கள் தங்களுடய உற்றார், உறவினர்களின் பிரிவுத் துயரச்செய்திகள், நினைவஞ்சலிகள் முதலியவற்றை எப்பொழுதும் ஏவ்வித சந்தாவுமின்றி இலவசமாகப் பிரசுரித்து அறிவித்தல் தரும் நோக்கத்தில் தாபிக்கப்பட்ட தொன்றாகும்.
மேலும் பல்வேறு முக்கிய செய்திகளைக்ககூட பகிர்ந்து கொள்ளும் வசதிகளும் இதில் தரப்பட்டுள்ளன.
செய்திகளைப் பிரசுரிப்பதற்கான விண்ணப்ப படிவமும், நிரப்புவதற்கான விதிமுறைகளும் விவரமாக இணையத்தளத்தில் இணைக்கப்பட்டுள்ளன.
உங்கள் வசதிக்கமைய செய்திகளை “info@tamilthakaval.org” என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பிவைக்கலாம்.
மேலதிக தகவல்களுக்கு 1-866-300-1765 என்ற தொலைபேசி இலக்கத்தில் எம்முடன் தொடர்பு கொள்ளலாம்.

இந்த இணையத்தளத்தை சில தொண்டர்கள் ஒரு சமூக சேவையாக கருதி பொறுப்புடன் நன்கு நடாத்தி வருகின்றார்கள். இவர்கள் இப்பணியை வெற்றிகரமாக தொடருவதற்கு ஈழத்தமிழர்களாகிய உங்களின் ஆதரவு மிகவும் இன்றியமையாதது. உங்களால் இயன்றவரை செய்திகளை உடனுக்குடன் தெரிவித்து இந்த இணையத்தளத்தில் பிரசுரிப்பதற்கு உதவி செய்து இச்சமூக சேவையை மேன்மேலும் மேன்மைபடுத்த உதவுமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

# வேலணையில் வளர்ப்பு கால்நடைகளை திருடி இறைச்சியாக்கி யாழ். நகருக்கு கொண்டு செல்ல முயன்ற கும்பல் வசமாக மாட்டியது

இலங்கை செய்திகள் Sri Lanka News

புே. கஜிந்தன்



வேலணையில் வீட்டு உரிமையாளர்களின் வளர்ப்பு கால்நடைகளை திருடி இறைச்சியாக்கி யாழ.ப்பாண நகருக்கு கொண்டு செல்ல முயன்ற கும்பல்! வசமாக மாட்டிய சம்பவம் அங்கு அதிர்வுகளை ஏற்படுத்தியுள்ளது. கால்நடைகளின் உரிமையாளர்கள் வளர்ப்புக் கால்நடைகளை அன்பு காட்டி வளர்ப்பார்கள். பாசம் காட்டுவார்கள். ஆனால் இந்தக் கயவர்கள் வளர்ப்புக் கால்நடைகளை இரக்கமின்றி கொன்று திருட்டு வியாபாரம் செய்துள்ளனர்.

வேலணை பிரதேசத்தில் கால்நடைப் பண்ணையாளர்களின் வளர்ப்பு கால்நடைகளை திருடி இறைச்சியாக்கி யாழ்ப்பாணம் உள்ளிட்ட பிற இடங்களுக்கு சட்டவிரோதமான முறையில் கொண்டுசென்று விற்பனை செய்துவந்த திருட்டுக் கும்பல் ஒன்று வேலணை வங்களாவடியில் பொதுமக்களால் பிடிக்கப்பட்டு நயப்புடைக்கப்படு ஊர்காவற்றுறை பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் 12ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று அதிகாலை 4.00 மணியளவில் இடம்பெற்றுள்து.

இச்சம்பவத்தின்போது 20 வயதுடைய இளைஞன் ஒருவரே பொதுமக்களால் பிடிக்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

இச்சம்பவம் குறித்து தெரியவருகையில், வேலணை பிரதேசத்தில் அண்மைக் காலமாக பெறுமதிமிக்க வளர்ப்புக் கால்நடைகள் திருட்டுப்போகும் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் பண்ணையாளர்கள் பெரும் பொருளாதார இழப்பையும் சந்தித்து வரும் நிலை காணப்படுகின்றது.

இதேநேரம் குறித்த சம்பவம் தொடர்பில் பொலிசாருக்கு முறைபாடுகள் செய்தும் திட்டமிட்ட இந்த திருட்டுச் சம்பவங்களை கட்டுப்படுத்துவதில் பெரும் சவால் இருந்து வந்தது.

இதையடுத்து பொதுமக்கள் தமது கால்நடைகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேலணைக்கு வரும் சந்தேகத்துக்கிடமான வாகனங்கள் மற்றும் நபர்கள் தொடர்பில் கண்காணிக்கும் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர்.

இந்நிலையில் 12ம் திகதி செவ்வாய்க்கிழமையன்று அதிகாலை பட்டாரக வாகனம் ஒன்றில் 5 பேரடங்கிய திருடுக் கும்பல் ஒன்று வங்களாவடிப் பகுதியில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதை அவதானித்த மக்கள் குறித்த நபர்களை பிடிக்க முயன்றபோது அவர்கள் தப்பியோட முயன்றுள்ளனர். நிலைமையை சுதாகரித்துக்கொண்ட மக்கள், பட்டாரக வாகனத்தை மறித்து அதில் இருந்த ஒருவரையும் இறைச்சியாக்கப்பட்ட மாட்டுடன் பிடித்து நயப்புடைத்து பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

ஏனைய நால்வர் தப்பியோடிய நிலையில் பொலிசார் அவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் இறங்கியுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.








# 1391 பேருடன் யாழ்ப்பாணம் வரும் மிகவும் பிரமாண்டமான அதிசொகுசு சுற்றுலாப் பயணிகள் கப்பல்!




இந்தியாவில் இருந்து MV Express (Cordelia Cruises) என்ற அதிசொகுசு சுற்றுலாப் பயணிகள் கப்பலானது 15ம் திகதி வெள்ளிக்கிழமை அன்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளதாக காங்கேசன் துறைமுக அத்தியட்சகர் த.பகீரதன் தெரிவித்துள்ளார்.

10 தளங்களை கொண்ட மிகவும் பிரமாண்டமான இந்த கப்பலானது இந்தியாவிலிருந்து சுமார் 1391 சுற்றுலாப்பயணிகளுடன் புறப்பட்டு அம்பாந்தோட்டை, திருகோணமலை ஊடாக வெள்ளிக்கிழமை காங்கேசன்துறையை வந்தடையவுள்ளது. இந்த கப்பலில் சுமார் 584 சிப்பந்திகள் (ஊழியர்கள்) பணி புரிகின்றனர்.

குறித்த சுற்றுலா பயணிகள் கப்பலானது கடந்த 2023ஆம் ஆண்டு 9 தடவைகளும் 2024ஆம் ஆண்டு 6 தடவைகளும் இலங்கைக்கு வந்திருந்தது. இவ்வாறிருக்க இந்த ஆண்டு 15ம் திகதி மற்றும் 22ஆம் திகதி ஆகிய இரண்டு தினங்கள் வருகைதரவுள்ளதாக த.பகீரதன் மேலும் தெரிவித்தார்.



இலங்கை செய்திகள்
Sri Lanka News

# முல்லைத்தீவில் சடலமாக மீட்கப்பட்ட குடும்பஸ்தர்: இராணுவத்தினர் மூவர் கைது! ஓக.19 வரை விளக்கமறியல்!



- ந.லோகதயாளன்

முல்லைத்தீவு மாவட்டம், ஒட்டுசுட்டான் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முத்துஜயன்கட்டுப் பகுதியில் இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டுத் தாக்கப்பட்ட பின்னர் காணாமல்போன இளம் குடும்பஸ்தர் ஒருவர் கடந்த 8ம் திகதி வெள்ளிக்கிழமை காலை சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பில் 3 இராணுவத்தினர், பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி த.பிரதீபன் உத்தரவிட்டுள்ளார். அதேவேளை, உயிரிழந்த இளம் குடும்பஸ்தரின் சடலம் நீதிபதியின் உத்தரவுக்கமைய உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. உடற்கூற்றுப் பரிசோதனை சனிக்கிழமை இடம்பெற்றது.

முத்துஜயன்கட்டு இராணுவ முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்ட ஐவரில் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டதுடன் மற்றுமொரு நபர் முதுகுப் பகுதியில் பலத்த அடிகாயங்களுடன் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். ஏனைய 3 நபர்களும் இராணுவத்தினரின் தாக்குதலுக்கு இலக்காகி அவர்களின் பிடியிலிருந்து தப்பி வந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஒட்டுசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வந்தனர்.

இது இவ்வாறிருக்க, முல்லைத்தீவு முத்ஜயன்கட்டு குளத்தில் இருந்து மீட்கப்பட்ட சடலத்தின் உடற்கூற்று மாதிரிகள் மேலதிக ஆய்விற்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது.

முத்தையன்கட்டு இராணுவ முகாமிற்கு சென்றபோது ஏற்பட்ட சம்பவத்தில் உயிரிழந்தார் என முத்தையன்கட்டு குளத்தில் இருந்து மீட்கப்பட்ட குடும்பஸ்தரின் உடற்கூற்றுப் பரிசோதனை சனிக்கிழமையன்று யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

மரணம் தொடர்பான மேலதிக தகவல்களை உறுதி செய்த மேலதிக உடற்கூற்று பரிசோதனைக்காக மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை இடம்பெறுவதாக சட்ட வைத்திய அதிகாரி இறந்தவரின் உறவுகளிடம் தெரிவித்தார்.



இதேநேரம் மளலதிக ஆய்வுகளின போது சீரான ஆய்விற்காக குளத்தின் நீரும் அனுப்பி வைக்கப்படுகின்றது. உயிரிழந்தவரின் உடலம் உறவுகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

# உயிரிழந்த தாயின் அவாவை நிறைவேற்ற சிறார்களுக்கு உணவூட்டிய அரசியல் கைதியின் சகோதரி!







அரசியல் கைதியின் சகோதரி ஒருவர் தனது தாயின் இறுதி ஆசையை நிறைவேற்றும் முகமாக சிறார்களுக்கு உணவூட்டிய நெகிழ்ச்சி சம்பவம் ஒன்று யாழ்ப்பாணம், அராலியில் இடம்பெற்றுள்ளது.

இது குறித்து மேலும் தெரியவருகையில், அரசியல் கைதியான விக்னேஸ்வரநாதன் பார்த்தீபனின் தாயார் தனது கையினால் தனது மகனுக்கு உணவூட்ட வேண்டும் என்ற அவாவில் இருந்துவந்துள்ளார். இருப்பினும் அவரது மகனான பார்த்தீபன் விடுதலையாகாத நிலையில் தாயாரின் இறுதி ஆசையும் நிறைவேறாத நிலையில் இயற்கை எய்தினார்.

பார்த்தீபன் இதுவரை விடுதலையாகாத நிலையில் அவரது தாயாரின் ஆசையை நிறைவேற்றும் முகமாக பார்த்தீபனின் சகோதரி வாஹினி இன்றையதினம் அராலி பகுதியில் உள்ள குழந்தைகளுக்கு தனது கரங்களால் உணவூட்டி தாயாரின் இறுதி ஆசையை நிறைவேற்றுவதற்கு முயற்சித்துள்ளார்.

இந்த சம்பவமானது அனைவர் மத்தியிலும் நெகிழ்ச்சியையும், அரசியல் கைதிகளின் விடயத்தில் வாக்குறுதிகளை வழங்கிவிட்டு தொடர்ச்சியாக ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசினது போலி முகங்களின் மீதான வெறுப்பினையும் ஏற்படுத்தியுள்ளது.

# இன அடிப்படையிலான போர் செய்த இலங்கையின் இராணுவ சிப்பாய்களின் மனங்களில் இனவாதம் தொடர்ந்தும் தங்கி இருக்கின்றது

## வெள்ளிக்கிழமை தமிழரசுக் கட்சி ஏற்பாடு செய்துள்ள ஹர்தாலை ஆதரிக்கிறோம்

தமிழ் முற்போக்கு கூட்டணி - இலங்கை
දමිළ ප්‍රගතිශීලී සංධානය - ශ්‍රී ලංකාව
Tamil Progressive Alliance - SriLanka

- த.மு.கூ தலைவர் மனோ கணேசன் அறைகூவல்

ஐந்து தமிழ் இளைஞர்கள், 8ம் திகதி முத்தையன் கட்டு இராணுவ முகாமுக்கு சிப்பாய்களால் அழைத்து செல்லப்பட்டுள்ளனர். பின்னர் அவர்கள் அந்த முகாமில் இருந்து தப்பி சென்றதாக கூறப்படுகிறது. தப்பி சென்றவர்களில் ஒருவரான, கபில் ராஜ், 9ம் திகதி முல்லை முத்தையன் கட்டு குளத்தில் சடலமாக மீட்க பட்டுள்ளார். தப்பி சென்ற ஏனைய நால்வர், தம்மை இராணுவத்தினர் கடுமையாக தாக்கி சித்திரவதை செய்ததாக குற்றம் சாட்டியுள்ளனர். ஆகவே என்ன நடந்தது என்பதை ஊகிப்பது கடினமானது அல்ல.

"இராணுவ பிரசன்னம் குறைப்பு" என்பதுதான் இந்த ஹர்த்தால் சொல்ல போகும் செய்தி. போர் செய்த இராணுவம் சும்மா இருக்காது. அதிலும் இன அடிப்படையிலான போர் செய்த இராணுவ சிப்பாய்களின் மனங்களில் இனவாதம் தங்கி இருக்கத்தான் செய்யும். எனவே அவர்களை தென்னிலங்கைக்கு கொண்டு வந்து, "குளம் வெட்டுவது, குளத்தில் தூர் எடுப்பது, வீதி அமைப்பது, வீடு கட்டுவது, ஹோட்டல் நடத்துவது, தோட்டம் செய்வது, காய்கறி சந்தை நடத்துவது" போன்ற இன்ன பிற அபிவிருத்தி பணிகளில், ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் அனுர குமார திசாநாயக்க, ஈடுபடுத்த வேண்டும்.

இந்த சம்பவத்தை அடிப்படையாக கொண்டு இலங்கை தமிழரசு கட்சி, "நீதியான விசாரணை", "வடகிழக்கில் இருந்து மேலதிக இராணுவம் குறைப்பு" ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து வெள்ளிக்கிழமை நடத்தும் முழு அடைப்பு என்ற ஹர்த்தாலை தாம் ஆதரிக்கிறோம் என தெரிவித்துள்ள தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மேலும் கூறி உள்ளதாவது:



ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் அனுர குமார திசாநாயக்க, இது தொடர்பில் உடன் விசாரணை, தண்டனைக்கு உரிய சட்ட நடவடிக்கை, ஆகியவற்றை ஏற்பாடு செய்ய வேண்டும். அத்துடன் இதை அடிப்படையாக கொண்டு, வடக்கு கிழக்கின் மேலதிக இராணுவ பிரசன்னத்தை உடன் குறைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

"இதற்கு முன் இப்படியான சம்பவங்கள் நடக்க வில்லையா? அப்போது நீங்கள் என்ன செய்தீர்கள்?" என எம்மை பார்த்து, தம்மை அறிவாளிகள் என நினைத்து கொண்டு, கேள்வி கேட்கும், ஜேவிபி அமைச்சர்கள், எம்பிக்கள் ஆகியோரின் வாய்களையும் ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் அனுர குமார திசாநாயக்க மூட வேண்டும். "அன்றைய அரசுகள் மாறி, மாறி செய்தவற்றை செய்ய நாம் வரவில்லை. மாற்றி செய்யவே நாம் வந்தோம்", என நீங்கள் தான் மக்களுக்கு கூறினீர்கள். அதேயே தான் நீங்களும் செய்ய வந்தீர்கள் என்றால், நாம் எதிர்க்கத்தான் செய்வோம்.

அரச இராணுவ பயங்கரவாதத்தை, நாம் அப்போதும் எதிர்த்தோம். இப்போதும் எதிர்கிறோம். எப்போதும் எதிர்ப்போம். வடக்கு கிழக்கில் அனைத்து மாவட்டங்களிலும் வெள்ளிக்கிழமை முழு அடைப்பு நடை பெற அழைப்பு விடுத்து இருக்கும் இலங்கை தமிழரசு கட்சியின் கோரிக்கையை, தமிழ் முற்போக்கு கூட்டணி வரவேற்று, ஆதரவை அறிவிக்கின்றது.

TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி
நீரிழிவு நோய், வயிற்றுவலி
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
Acupuncturist (R.A.C)
தொடர்புகொள்ளவும்.
(416) 754-4024
5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5

இலங்கை செய்திகள் Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் போராட்டத்தை கை விடுவதா? இல்லையா?

## போராட்டக்காரர்களுடன் கலந்துரையாடி யே இறுதி முடிவு எடுக்கப்படும் என்கிறார் மார்க்கஸ் அடிகளார்



- எஸ்.ஆர்.லெம்பேட் (14-08-2025)

மன்னாரில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதா? அல்லது தற்காலிகமாக கைவிடுவதா? என்பது குறித்து போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற வர்களுடன் கலந்துரையாடி முடிவு எடுக்கப்படும் என மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை மார்க்கஸ் அடிகளார் தெரிவித்தார்.

குறித்த போராட்டத்தை குறித்த காலப்பகுதிக்குள் கைவிடுமாறு கோரி அரசாங்க அதிபரினால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதில் வழங்கும் வகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னாரில் இரண்டாம் கட்ட காற்றாலை அமைத்தல் மற்றும் கனிய மண் அகழ்வை முற்றிலும் நிறுத்த கோரி மன்னார் தீவு மக்கள் சுழற்சி முறையில் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், மன்னார் மக்கள் சார்பாக ஐந்து பிரதிநிதிகள் கொண்ட குழுவினர் 13ம் திகதி புதன்கிழமை அன்றைய தினம் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினர்.

இவ் விசேட சந்திப்பின் உத்தியோபூர்வ கடிதம் 14ம் திகதி அன்று மாலை மன்னார் பிரஜைகள் குழு தலைவரிடம் மன்னார் அரசாங்க அதிபர் கையளித்தார்.

காற்றாலை மின்சாரம் கனிம மணல் அகழ்வை நிறுத்தக் கோரி தொடர் போராட்டம் மன்னார் நகர மத்திய சுற்று வட்ட பிரதான வீதி பகுதியில் 12 நாளாக அன்று (14) முன்னெடுக்கப்பட்டது.

குறித்த போராட்டம் தொடர்பில் செவ்வாய்க்கிழமையன்று (13) பிற்பகல் ஜனாதிபதியுடனான கூட்டத்தில் தற்காலிகமாக ஒரு மாத காலம் நிறுத்தி வைப்பதுடன் குறித்த காலத்தில் திட்டம் தொடர்பில் சாதகமான மற்றும் பாதகமான அறிக்கையொன்றை தயாரிப்பதற்கு மக்களின் கருத்துக்களை கேட்டு அறிவதற்குமான தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இந்தத் தீர்மானம் தொடர்பான உத்தியோகபூர்வ கடிதம் எரிசக்தி அமைச்சினூடாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு கிடைக்கப்பெற்ற நிலையில் குறித்த கடிதத்தை வியாழன் அன்று 14ம் திகதி பிற்பகல் சுமார் 5.50 மணி அளவில் போராட்டத்தை முன்னெடுத்த மக்கள் பிரதிநிதிகள், மற்றும் மன்னார் பிரஜைகள் குழுவின் தலைவர் அருட்தந்தை எஸ். மாக்கஸ் அடிகளாரிடம் அரச அதிபர் கையளித்தார்.

குறித்த கடிதத்தை பெற்றுக் கொண்ட மார்க்கஸ் அடிகளார் போராட்டத்தை கை விடுவது குறித்து மக்கள் பிரதிநிதிகளிடம் கலந்தாலோசித்து உத்தியோகபூர்வமாக அறிவிப்பதாக தெரிவித்தார்.



# மாந்தை மேற்கில் ஓரங்கட்டப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டி எழுப்பும் நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுப்பு

- எஸ்.ஆர்.லெம்பேட் (14-08-2025)

ஓரங்கட்டப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை கட்டி எழுப்பும் திட்டத்தின் கீழ் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையத்தின் ஊடாக மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் தெரிவு செய்யப்பட்ட குளங்களில் நன்னீர் மீன் வளர்ப்பு திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.



முதற்கட்ட நிகழ்வாக 14ம் திக்தி அன்றையதினம் வியாழக்கிழமை மாந்தை மேற்கு பிரதேசச் செயலாளர் பிரிவில் தாமரைக் குளத்தில் மீன் குஞ்சுகள் விடும் நிகழ்வு இடம்பெற்றது.

குறித்த நிகழ்வு விழுது நிறுவனத்தின் சிரேஷ்ட திட்ட அலுவலர் டலிமா தலைமையில்,இடம்பெற்றது.

குறித்த நிகழ்ச்சி திட்டத்தின் ஊடாக பெண்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துதல்,கிராம அபிவிருத்தி முன்னெடுத்தல் உள்ளிட்ட நிகழ்வாக இடம்பெற்றது.

குறித்த நிகழ்வில் மாந்தை மேற்கு பிரதேச செயலக அதிகாரிகள், கிராம அலுவலர்கள், உள்ளடங்களாக அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.


Thana Insurance Inc

T20 INSURANCE

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | T20 | 17 | 15 | 18 | 15 | 20 | 17 | 27 | 21 | 43 | 30 | 69 | 49 |
| 500K | T20 | 30 | 22 | 31 | 22 | 32 | 24 | 46 | 35 | 73 | 54 | 126 | 85 |
| 1MILL | T20 | 54 | 36 | 55 | 38 | 56 | 42 | 86 | 62 | 139 | 100 | 244 | 164 |

PERMANENT LIFE INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 25 | | 30 | | 35 | | 40 | | 45 | | 50 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 200K | WL | 82 | 71 | 100 | 86 | 123 | 106 | 152 | 131 | 197 | 166 | 238 | 209 |
| 500K | WL | 192 | 164 | 232 | 202 | 295 | 251 | 368 | 316 | 480 | 407 | 587 | 513 |

NON MEDICAL INSURANCE (PREMIUM NEVER INCREASE)

| AGE | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | | 70 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 25K | WL | 38 | 34 | 47 | 40 | 55 | 49 | 76 | 75 | 106 | 84 | 148 | 105 |
| 50K | WL | 69 | 62 | 89 | 75 | 104 | 93 | 147 | 123 | 206 | 162 | 290 | 205 |
| 100K | WL | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 319 | 475 | 405 |

20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | | 40 | | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | M | F | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | T20 | 20 | 17 | 28 | 22 | 41 | 34 | 78 | 57 | 131 | 88 | 233 | 157 |
| 200K | T20 | 33 | 30 | 50 | 38 | 78 | 63 | 150 | 108 | 257 | 171 | 460 | 307 |

Thana Manickavasagar
Insurance Broker



THANA INSURANCE Inc.

Web : www.thana.ca
E-mail : thana7@gmail.com
Address : 80 Nashdene Road , unit D218, Scarborough, ON,M1V 5E4

Cell : 416-728-5772
Office : 416-519-3896

"WE DO 100% ONLINE SERVICES,24/7."



# சுன்னாகத்தில் களவாடப்பட்ட பெறுமதிமிக்க நகைகளுடன் ஊர்காவற்றுறையில் ஒருவர் கைது!

இலங்கை செய்திகள் Sri Lanka News

சுன்னாகத்தில் களவாடப்பட்ட பெறுமதி மிக்க நகைகள் மற்றும் கைத்தொலைபேசிகளுடன், பல்வேறு திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் ஊர்காவற்றுறை பொலிசாரால் கைதுசெய்யடுள்ளார்.

குறித்த சம்பவம் 14ம் திகதியன்று வியாழக்கிழமையன்று முற்பகல் ஊர்காவற்றுறை நாரந்தனைப் பகுதியில் இடம்பெற்றது.

இது தொடர்பில் தெரியவருகையில், வழமைபோன்று பகல் வீதி கண்காணிப்பு நடவக்கைகளுக்காக கொன்ஸ்ரபில் ஹரிதாஸ் தலைமையிலான ஊர்காவற்றுறை பொலிஸ் அணியினர் நாரந்தனை பகுதியில் ஈடுபட்டிருந்த போது வீதியில் சந்தேகத்துக்கு இடமான முறையில் ஒருவர் நடமாடியதை அவதானித்த அவரை மறித்து சோதித்த போது அவரது காற்சட்டை பொக்கற்றில் தாலிக்கொடி, சங்கிலி, மோதிரங்கள், பென்ரன்கள், இருந்ததை அவதானித்துள்ளனர்.

இதையடுத்து அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டபோது அவை சுன்னாகம் பகுதியில் களவாடப்பட்ட பெறுமதிமிக்க நகைகள் என தெரியவந்தது.

இதையடுத்து குறித்த சந்தேக நபரின் வீட்டுக்கு சென்று சோதனைகளை மேற்கொண்டபோது அங்கு பல நவீன கைத்தொலைபேசிகள், ஒருதொகைப் பணம் இலத்திரனியல் சாதனங்கள் உள்ளிட்ட பல பொருட்களையும் கைப்பற்றியுள்ளதாக ஊர்காவற்றுறை பொலிசார் தெரிவித்தனர்.

அத்துடன் குறித்த சம்பவம் தொடர்பில் ஊர்காவற்றுறை பொலிசார், சுன்னாகம் பொலிசாருக்கு தகவல் வழங்கியதை அடுத்து குறித்த சந்தேக நபரையும் மீட்கப்பட்ட பொறுமதிமிக்க பொருட்களையும் சுன்னாகம் பொலிசாரிடம் ஊர்காவற்றுறை பொலிசார் கையளித்ததை அடுத்து, சுன்னாகம் பொலிசார் தமது பொலிஸ் நிலையத்துக்கு கொண்டுசென்றுள்ளனர்.

அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து வரும் நிலையில் குறித்த நகைகளுடன் ஒருவர் கைதுசெய்யப்பட்டதை அடுத்து திருட்டுக் சம்பவங்களுடன் தொடர்புடைய விசாரணைகளில் பொலிசார் தீவிரம் காட்டியுள்ளதுடன் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபரை மல்லாகம் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிசார் தெரிவித்தனர்.





# மடு அன்னையின் ஆவணித் திருவிழா

## துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள் மத்தியில் மக்கள் ஆறுதல் தேடித் தஞ்சமடையும் தாயாக மடு அன்னை விளங்குகிறாள்

- எஸ்.றொசேரியன் லெம்பேட்

வரலாற்று சிறப்புமிக்க மன்னார் மருத மடுத்திருப்பதியில் மடுமாதா திருவிழா 15ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை வெகு விமர்சையாக கொண்டாடப் படவுள்ளது.

மடு திருப்பதி புனித மரியாளின் பெயரில் இலங்கையில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஒரு திருத்தலமாகும். அந்த வகையில் மரியன்னை விண்ணேற்றம் அடைந்த திருநாளில் ஒவ்வொரு வருடமும் இத் திருவிழா கொண்டாடப்பட்டு வருகின்றமை சிறப்பம்சமாகும்.

திருவிழா திருப்பலி இன்று வெள்ளிக்கிழமை 15 ஆம் திகதி 6.15 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு அந்தோனிப்பிள்ளை ஞானப்பிரகாசம் ஆண்டகை தலைமையில் ஒப்புக் கொடுக்கப்படும்.

நாட்டின் ஏனைய மறை மாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்கள், குருக்கள் ஆகியோரின் பங்கேற்புடன் திருவிழாக் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட உள்ளது.

மேலும், திருவிழா நிகழ்வுகள் திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார் தலைமையில் கடந்த 6 ஆம் திகதி மாலை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 15ஆம் திகதி காலை திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

மடு திருப்பதி சுமார் 500 ஆண்டுகளுக்கு மேல் பழமையான திருத்தலமாகும். தமிழ் - சிங்கள மக்களின் விசுவாசத்திற்கு உரிய வழிபாட்டுத் தலமாக இது திகழ்கிறது.

வருடா வருடம் நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து பல்லாயிரக்கணக்கானோர் மடு திருவிழாவில் கலந்து கொண்டு வருகின்றனர். திருவிழா திருப்பலியில் சுமார் 10 லட்சம் மக்கள் வரை கலந்து கொள்வர்.

ஒல்லாந்தர் இலங்கையை ஆண்ட காலப்பகுதியோடு தான் மடுத்திருப்பதியின் வரலாறும் ஆரம்பமாகின்றது. மன்னாரில் இருந்து 10 கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருக்கும் மாந்தை என்ற கிராமத்தின் ஆலயம் தான் மடுமாதா திருச்சுருபத்தின் ஆரம்ப இருப்பிடமாகும்.

“செபமாலை மாதா” என்று அழைக்கப்பட்ட அந்தத் திருச்சுருபம் தான் இன்றைய மடுமாதா. ஒல்லாந்தருடைய ஆட்சியில் கத்தோலிக்கருக்கு எதிராக கொடூரமான வேத கலாபனை ஆரம்பித்தது.

இந்தக் கலா பனையில் இருந்து தங்களைக் காப்பாற்றும் பொருட்டும் செபமாலை மாதாவின் திருச்சுருபத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் மாந்தை மக்கள் அங்கிருந்து புறப்பட்டனர்.

குருக்களின் துணையில்லாத அந்த வேளையிலும் மாந்தையில் இருந்த 20 பக்தியுள்ள குடும்பங்கள் செபமாலை மாதாவின் திருச் சுருபத்தைத் தூக்கிக் கொண்டு அடர்ந்த வன்னிக் காட்டில் புகுந்தனர்.

திசை தெரியாது அங்கும் இங்கும் அலைந்தனர். இறுதியாக “மருதமடு” என்ற இடத்திற்கு எவ்வித ஆபத்தும் இன்றி மாதாவின் வழி நடத்தலோடு வந்து சேர்ந்தார்கள். மடுத் திருப்பதியின் அற்புத ஆற்றல் உலகறிந்த விடயமாகும்.

மடு அன்னையின் பரிந்துரையால் பல அற்புதங்கள் நடைபெறுகின்றன. அதனால் தான் இப்பதி நோக்கி மக்கள் இலட்சக் கணக்காக கூடுகின்றனர்.

பொன் விளையும் பூமி என்பது போல் மடு அன்னையின் திருப்பதியில் உள்ள மண் கூட மருந்தாகத் திகழ்கிறது. இந்த மண் அருள் நிறைந்த மண்! ஆற்றல் நிறைந்த மண்!

இத்திருத்தல மண்ணுக்கு சிறப்பான பெருமை உண்டு. உலகின் எங்குமே இல்லாத நிலையில் திருத்தலத்திலிருந்து பெறப்படும் மண் நோய் தீர்க்கும் அருமருந்தாக விளங்குகிறது. இத்திருப்பதியின் வளாகத்திலிருந்து பெறப்படும் மண் ஆசீர்வதிக்கப்பட்டு பிரதான ஆலயத்தின் ஒரு மூலையில் அதற்கென அமைக்கப்பட்ட ஒரு தொட்டியில் வைக்கப்படுகின்றது. இந்த மண்ணை மக்கள் தம் வீடுகளுக்கு எடுத்துச் செல்கிறார்கள்.

குணமளிக்கும் மருந்தாக இந்த மண்ணைப் பயன்படுத்துகின்றார்கள். “கோயில் மருந்து” என்று இது அழைக்கப்படுகிறது.

மடுத் திருப்பதியின் புனிதத்திற்கு அருள் வளத்திற்கும் சிறப்பான ஒரு எடுத்துக்காட்டாக “கோயில் மருந்து” என்று அழைக்கப்படும் இந்த மடு மண் அன்று தொடக்கம் இன்று வரை திகழ்கின்றது.

பாம்பு தீண்டிய நிலையில் இங்கு கொண்டுவரப்படும் மக்கள் இப்பதியை அடைந்ததும் குணம் பெறுகின்றார்கள் என்பதும் மக்களின் ஆழமான விசுவாசமாகும். “கருணைமழை பொழியும் கானகச் செல்வி” என மடு அன்னை அழைக்கப்படுகின்றாள். குறைவு படாத தாயன்புக்கு இலக்கணமாக இவள் விளங்குகின்றாள்.

துன்பங்கள், துயரங்கள், இழப்புக்கள் மத்தியில் மக்கள் ஆறுதல் தேடித் தஞ்சமடையும் தாயாக மடு அன்னை விளங்குகிறாள். தாயன்பு - அது தனி அன்பு அது தனித்துவமான அன்பு கூட. அம்மை அப்பனாக விளங்கும் இறைவனுடைய தாயன்பை திருவிவிலியம் தெளிவாகச் சொல்கிறது. “நீங்கள் மார்பில் அணைக்கப்படுவீர்கள். மடியில் வைத்துக் சீராட்டப்படுவீர்கள். ஒரு தாய் தன் குழந்தையைத் தேற்றுவதுபோல நானும் உங்களைத் தேற்றுவேன்.”

இறைதந்தையின் இத்தகைய அன்பையே மடு அன்னையும் பிரதி பலிக்கின்றாள். “பெரும் சுமை சுமந்து சோர்ந்திருப்பவர்களே நீங்கள் எல்லாரும் என்னிடம் வாருங்கள். உங்களை நான் இளைப்பாற்றுவேன்” என்று நம் ஆண்டவர் இயேசு கூறியதற்கிணங்க ஆண்டவன் இயேசுவின் தாயல்லவா நம் மடு அன்னை! தனயனின் அதே வார்த்தைகளை தாயும் கூறி அழைக்கின்றாள்.

அந்த அன்னையின் அருகில் இருக்க,அவளது பாதத்தில் அமர்ந்து தம் குறைகளைச் சொல்ல, அவளது தாயன்பில் திழைத்திருக்க அவளது பிள்ளைகள் இலங்கையின் நாலா திசைகளிலிருந்தும் வந்து குவிகின்றார்கள். அன்னையிடமிருந்து ஆறுதலையும் தேறுதலையும் பெறுகின்றார்கள்.

மடுத்திருப்பதி ஒற்றுமையினதும் ஒன்றிப்பினதும் மத்திய நிலையமாக திகழ்கின்றது. எக்குலத்தவராயினும், எம்மொழியினராயினும் இனவ்வினத்தவராயினும் அனைவரும் இறைவனின் பிள்ளைகளே என்ற உணர்வுடன் இத்திருப்பதி அனைத்து மக்களையும் வரவேற்கின்றது.

இத் திருப்பதியின் நுழைவாயிலில் அமைந்துள்ள மடு அன்னையின் திருச்சுருபம் “வரவேற்பு மாதா” என்று அழைக்கப்படுகிறது. மடு அன்னை இரு கரங்களையும் விரித்தவராய் தன் திருப்பதி நோக்கி வரும் அனைவரையும் தன் கைகளை நீட்டி அழைக்கும் தோற்றத்தோடு விளங்குவது கண்ணுக்கினிய காட்சியாகும்.

மக்கள் மத்தியில் மன்னிப்பு, ஒப்புரவு, சமாதானம் போன்ற உயர்ந்த விழுமியங்களை ஏற்படுத்துவதற்கு அவர்கள் ஒன்று சேரக்கூடிய ஒரே இடம் இந்த நாட்டில் மடுத்திருப்பதி தான். கன்னி மரியாள் களங்கமற்ற நீர்ச்சுனை. இறை மகனையே தன் உதரத்தில் சுமந்ததிருப்பேழை. கடவுளையே தாங்கி நின்ற பதிரப் பாத்திரம்.

ஆன்மாவோடும் உடலோடும் விண்ணேற்றம் அடைந்த அன்னை மரியாவுக்கு மடுப்பதியில் பெருவிழா. அலகையை வென்று அகிலத்தைக் காத்த அந்த அன்னைக்கு இறைவன் அளித்த அன்புப் பரிசு அவரை விண்ணகத்திற்கு அழைத்துக்கொண்டது. தாய் விண்ணேறிச் சென்றால் சேய்கள் நமக்கெல்லாம் அது பெருவிழா தானே!

அதனால் தான் மடுத்திருப்பதி விழாக்கோலம் பூண்டு மக்கள் வெள்ளத்தில் நிரம்பி வழிகின்றது. “மருதமடு மாதாவே மனுக்குலத்தின் தாயாரே” என்ற கான வரிகள் காற்றில் என்றும் கலக்கட்டும். அதன் வழி மருதமடு தாயின் புகழ் என்றும் நிலைக்கட்டும்.







# வடக்கு முதலமைச்சர் பதவிக்கு சுமந்திரன் பொருத்தமானவரா ...?

**"வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட விரும்புகின்றேன். எனது வேட்புமனுவை அங்கீகரிப்பதோ அல்லது நிராகரிப்பதோ கட்சியின் முடிவைப் பொறுத்தது. என்னை விட பொருத்தமான ஒரு வேட்பாளரை வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு கட்சி அடையாளம் கண்டால் கட்சியின் முடிவுக்கு நான் முழுமையாகக் கட்டுப்படுவேன்" என்கின்றார் சுமந்திரன்**

**— பாலா —**

இலங்கையில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் நடந்து முடிந்த நிலையில் அடுத்து பல வருடங்களாக நடத்தப்படாதுள்ள மாகாணசபைகளுக்கான தேர்தல் நடக்குமா ,நடக்காதா என்ற எதிர்வு கூறல்களுக்கு மத்தியில் "வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட நான் தயார்" என்ற அறிவிப்பை விடுத்து தமிழ் தேசிய அரசியல் பரப்பை குறிப்பாக வடக்கு அரசியல் களத்தை பரபரப்பாக்கியுள்ளார் இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் முன்னாள் எம்.பி.யும் ஜனாதிபதி சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன்.

"வடக்கு மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட விரும்புகின்றேன். இந்த விடயத்தை நான் முறையாக கட்சிக்கு அறிவிக்கவுள்ளேன். எனினும், எனது வேட்புமனுவை அங்கீகரிப்பதோ அல்லது நிராகரிப்பதோ கட்சியின் முடிவைப் பொறுத்தது. என்னை விட பொருத்தமான ஒரு வேட்பாளரை வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு கட்சி அடையாளம் கண்டால் கட்சியின் முடிவுக்குநான் முழுமையாகக் கட்டுப்படுவேன்." என்று அண்மையில் நடந்த தமிழரசுக் கட்சியின் அரசியல் குழுக்கூட்டத்தின் பின்னர் சுமந்திரன் கூறியுள்ளார்.

மாகாண சபைகளுக்கான தேர்தல் நடைபெறுமா இல்லையா என்பதற்கு அப்பால் அப்படி ஒரு வேளை நடத்தப்பட்டால் அதில் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிட இலங்கை தமிழரசுக்கட்சியின் பதில் பொது செயலாளரான சுமந்திரன் தகுதியானவரா? சர்ச்சைகளுக்கு பெயர்போன சுமந்திரனை களமிறக்க தமிழரசுக்கட்சி முன்வருமா? அவ்வாறு அவர் களமிறங்கினால் அவருக்கு வடக்கு மக்கள் வாக்களிப்பார்களா? என்ற பல கேள்விகள் எழுந்துள்ளன.

இதில் வடக்கு முதலமைச்சர் பதவிக்கு சுமந்திரன் தகுதியானவரா என்ற கேள்விக்கு கண்ணை மூடிக்கொண்டு "ஆம் தகுதியானவர்" என்று பதில் கூற முடியும். சுமந்திரன் ஒரு ஜனாதிபதி சட்டத்தரணி. இலங்கை சட்டத்தரணிகளில் பிரபலமானவர். சட்டத்தின் சகல சந்துபொந்துகளையும் நன்கு அறிந்தவர். சட்ட சாணக்கியம் மட்டுமன்றி அரசியல் சாணக்கியமும் கைவரப் பெற்றவர். அரசியலிலும் அனைத்துலகிலும் அனைவரினாலும் நன்கு அறியப்பட்டவர். ஆங்கில, சிங்கள மொழியறிவு கொண்டவர். தான் எடுத்த காரியத்தை முடிக்க எந்த எல்லைக்கும் செல்லக்கூடிய தைரியம் கொண்டவர். ஆகவே அவர் வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு மிகவும் பொருத்தமானவர்.

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பதவி மூலம் சாதிப்பதனை விட ஒரு மாகாண முதலமைச்சராக பல விடயங்களை சாதிக்க முடியும். அதனை சாதிக்க சர்வாதிகாரத்தனமும் சாணக்கியமும் தற்றுணிவும் அவசியம். இவை சுமந்திரனிடம் தாராளமாகவேயுள்ளன. எனவே சுமந்திரன் முதலமைச்சராக வருவாரேயானால் வடக்கு மாகாணத்தில் ஒரு "தரமான" ஆட்சி கட்டுக்கோப்புடன் நடந்தேறும் என்பதனை முழுமையாக நம்பலாம்.

சர்ச்சைகளுக்கு பெயர்போன சுமந்திரனை களமிறக்க தமிழரசுக்கட்சி முன்வருமா? என்ற அடுத்த கேள்விக்கு "வேறு வழியில்லை" என்பதே பதிலாக இருக்கும். தமிழரசுக் கட்சியில் மக்கள் செல்வாக்கு அதிகம் உள்ளவராகவும் வடக்கு முதலமைச்சராக போட்டியிட வேண்டுமென எதிர்பார்க்கப்படுபவருமாக தற்போதைய யாழ் மாவட்ட எம்.பி. யான சிவஞானம் சிறீதரன் உள்ளார். ஆனால் அவர் வடக்கு மாகாண முதலமைச்சர் பதவிக்கு போட்டியிடுவதில்லை என்பதில் மிகவும் உறுதியாகவுள்ளார். அதனை பல தடவைகள் பொது வெளிகளிலும் பகிரங்கமாக அறிவித்துள்ளார். ஆகவே அவர் முதலமைச்சர் வேட்பாளருக்கான பட்டியலில் இல்லை.

அவருக்கு அடுத்ததாக தமிழரசுக்கட்சியில் பிரபலமிக்கவர்களாக பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம், பதில் பொது செயலாளர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோரே உள்ளனர். இவ்விருவரில் சி.வி.கே. சிவஞானம் ஏற்கனவே வடக்கு மாகாண அவைத்தலைவராக பதவி வகித்தவர். வயது முதிர்ந்தவர். அண்மையில் ஈ.பி.டி.பி.யின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவுடன் தமிழரசுக்கட்சி கூட்டு சேர்ந்த விடயத்தில் முக்கியமானவராக இருப்பதால் மக்கள் வெறுப்புக்குள்ளாகி இருப்பவர். அதனால் இவர் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கினால் தோல்வியடைவது நிச்சயம். இது சிவஞானத்திற்கும் நன்கு தெரியும் என்பதனால் அவர் களமிறங்க மாட்டார். ஆகவே அடுத்த தெரிவில் உள்ளவர் சுமந்திரன் மட்டும்தான். ஆகவே தமிழரசுக்கட்சி சுமந்திரனை களமிறக்க வேண்டிய நிலையில்தான் உள்ளது.

அடுத்த கேள்வி முதலமைச்சர் வேட்பாளராக சுமந்திரன் களமிறங்கினால் அவருக்கு வடக்கு மக்கள் வாக்களிப்பார்களா? என்பது. சுமந்திரன் தமிழ் தேசியத்திற்கு எதிரானவர். பேரினவாத தலைவர்களின் விசுவாசி, இராணுவம் மீது போர்க்குற்ற விசாரணை நடத்தப்படுமெனில் விடுதலைப் புலிகள் மீதும் போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென பகிரங்கமாக கூறியவர். இனப்படுகொலை நடக்கவில்லை என்று கூறியவர், வடக்கு முதலமைச்சராக நீதியரசர் விக்னேஸ்வரன் இருந்தபோது அவருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவர பின்னணியில் இருந்தவர், வடக்கு மாகாணசபையில் நிறைவேற்றப்பட்ட தமிழின படுகொலை தொடர்பான தீர்மானத்தை கடுமையாக எதிர்த்தவர், தமிழ் பொது வேட்பாளரை கடுமையாக எதிர்த்து சிங்கள வேட்பாளரான சஜித் பிரேமதாசாவுக்கு ஆதரவளித்தவர், தமிழரசுக்கட்சியின் தலைவராக பொதுக்குழு வாக்கெடுப்பில் சிவஞானம் சிறீதரன் வெற்றிபெற்றபோதும் தனது விசுவாசிகளை வைத்து வழக்குத் தாக்கல் செய்து சிறீதரனை இன்று வரை பதவியேற்க விடாது தடுத்து வைத்திருப்பவர், தற்போது தமிழரசின் பதில் பொது செயலாளராகி கட்சியிலிருந்து சிறீதரன் எம்.பி.உள்ளிட்ட தமிழ் தேசிய உணர்வாளர்களை வெளியேற்றும் முயற்சியில் இருப்பவர் என்பனவற்றால் சுமந்திரன் தமிழ் மக்களின் வெறுப்புக்குள்ளாகி இருப்பவர். அதனால்தான் நடந்து முடிந்த பாராளுமன்றத் தேர்தலில் அவர் தமிழ் மக்களினால் தோற்கடிக்கப்பட்டார்.

இவ்வாறான நிலைமைகள் இருந்தாலும் வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக சுமந்திரன் களமிறங்கினால் விரும்பியோ விரும்பாதோ சுமந்திரனை ஆதரிக்க வேண்டிய நிலை தமிழ் மக்களுக்குள்ளது. ஏனெனில் வடக்கு, கிழக்கு மாகாணங்களை பொறுத்தவரையில் தமிழரசுக் கட்சிதான் தாய்க் கட்சி. பெரிய கட்சி. அதற்கு அடுத்ததாக கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணி உள்ளது. ஆனால் தற்போது 3 ஆவது சக்தியாக சிங்கள பேரினவாத கட்சியான ஜனாதிபதி அநுரகுமார தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி கூட்டு வடக்கில் உருவாகி வருகின்றது ஆகவே தமிழரசு அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியில் ஒன்றின் முதலமைச்சர் வேட்பாளரையே தமிழ் மக்கள் ஆதரிப்பர். இதில் முதல் தெரிவாக தமிழரசுக்கட்சிதான் உள்ளது. ஆகவே சுமந்திரன் போட்டியிட்டால் தமிழ் மக்கள் ஆதரவளிப்பர். ஆதரவளிக்க வேண்டும்.

இதற்கு இன்னொரு காரணமும் உண்டு. அதாவது பாராளுமன்றத் தேர்தலில் யாழ் மாவட்ட தேர்தல் தொகுதியில் தமிழரசுக்கட்சி சார்பில் சிறீதரன், சுமந்திரன் இணைந்து போட்டியிட்ட நிலையிலேயே சுமந்திரன் தோல்வியை தழுவினார். சிறீதரனுக்கு வாக்குகள் சென்றன. ஆனால் மாகாண சபைத் தேர்தலில் சிறீதரன் போட்டியிடாத நிலையில் சுமந்திரன் மட்டும் போட்டியிடுவதினால் வாக்குகள் பிளவடையாது. அத்துடன் சிறீதரனும் அவரது அணியினரும் கட்சி என்ற ரீதியில் சுமந்திரனுக்கு ஆதரவாக தீவிர பிரசாரங்களில் ஈடுபடுவர். ஆகவே தமிழரசுக்கட்சி ஓரணியாக செயற்படும்போது மக்கள் நிச்சயம் வாக்களிப்பர். அதிலும் "படித்தவர்", "மொழியாற்றல்" என்ற மயக்க நிலை ஒன்று வடக்கு தமிழரிடம் இருப்பதால் அது இரண்டும் கொண்ட சுமந்திரனுக்கு மக்கள் ஆதரவு கிடைக்கும்.

தமிழ் தேசிய உணர்வாளர்களினாலும் பெரும்பாலான தமிழ் மக்களினாலும் சுமந்திரன் வெறுக்கப்படுபவர். அதனால் அவர் முதலமைச்சர் வேட்பாளராக களமிறங்கினால் நிச்சயம் தோற்கடிக்கப்படுவார். இதனால் தமிழரசுக்கட்சியும் படுதோல்வி அடையும் என சிலர் எதிர்வு கூறுகின்றனர். வெற்றிபெறக்கூடிய ஒரே வேட்பாளர் சிறீதரன். ஆனால் அவர் முதலமைச்சர் பதவிக்கு போட்டியிட மாட்டேன் என்பதில் உறுதியாகவுள்ள நிலையில் சுமந்திரனுக்கு பதிலாக யாரை களமிறக்கினால் தமிழரசுக்கட்சி வெற்றிபெறும் என்பதனை சுமந்திரனை எதிர்ப்போரினால் கூற முடியாதுள்ளது.

எனவே வடக்கு மாகாண முதலமைச்சர் வேட்பாளராக சுமந்திரன் களமிறங்குகின்ற நிலையில் அவர் மீதுள்ள வெறுப்புக்கள், குற்றச்சாட்டுக்களை காரணம் காட்டி வடக்கு தமிழ் மக்கள் சுமந்திரனை புறக்கணிப்பார்களாயின் அது வடக்கு மாகாண முதலமைச்சர் பதவியை, வடக்கு தமிழ் மக்களை ஆளக்கூடிய அதிகாரத்தை சிங்கள பேரினவாத கட்சி ஒன்றுக்கு கொடுக்கக் கூடிய நிலைமையைக் கூட ஏற்படுத்தி விடும். இதில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணியை குறைத்து மதிப்பிடவில்லை ஆனால் நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் யாழ் மாநகர சபைக்கான தேர்தல் முடிவுகளை அவதானித்தால் ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி வடக்கு மாகாணத்தில் ஒரு அச்சுறுத்தல் நிலையில் வளர்ந்திருப்பதை புறக்கணிக்க முடியாது.

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தலில் வடக்கின் தலைநகரான யாழ் மாநகரசபைக்கான தேர்தலில் இலங்கை தமிழரசுக்கட்சி 13 ஆசனங்களையும் தமிழ் தேசிய மக்கள் முன்னணி 12 ஆசனங்களையும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டமைப்பு 4 ஆசனங்களையும் ஈ.பி.டி.பி. 4 ஆசனங்களையும் ஐக்கிய மக்கள் சக்தி 1 ஆசனத்தையும் பெற்றுள்ள நிலையில் சிங்கள பேரினவாத கட்சியான அநுரகுமார திசாநாயக்க தலைமையிலான ஜே.வி.பி.-தேசிய மக்கள் சக்தி 10 ஆசனங்களை பெற்றிருந்தது. இது ஒரு அச்சுறுத்தலான நிலைமை. எனவே. மாகாணசபைக்கான தேர்தல் நடக்கும்போது வடக்கு மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளர் யார் என்பதனை விட மாகாணசபையின் ஆட்சியே முக்கியம் என்பதனை தமிழ் மக்கள் நன்குணர வேண்டும். அவ்வாறு உணரும் பட்சத்தில் தமிழ் மக்கள் நிச்சயம் சுமந்திரனுக்கு வாக்களிப்பார்கள். வாக்களிக்க வேண்டும்.



# சுமந்திரன் அழைத்திருக்கும் கர்த்தால் வெற்றி பெறுமா?

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார் -**

**ஹ**ர்த்தாலுக்கான காரணங்களை நாம் ஏற்றுக்கொள்கிறோம். அதற்கு நாம் ஆதரவாக இருக்கின்றோம். இன்று மட்டுமல்ல மன்னார் ஆயர் இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் காலத்திலும் மன்னார் மறை மாவட்டத் திருச்சபை குறிப்பாக மன்னார் குருக்கள் ஆயரோடு இணைந்து தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல்கொடுத்துள்ளனர். தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அனைத்து வகையான அநீதிகளுக்கு எதிராகவும் போராடியுள்ளனர். இதை முழு உலகமும் அறியும். இந்த நிலையில் மடுத்திருப்பதியின் ஆவணித் திருவிழாவை கவனத்தில் கொள்ளாமல் இலங்கைவாழ் கத்தோலிக்க மக்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்ளாமல் எடுக்கப்பட்ட இந்த தீர்மானம் எமக்கு மிகுந்த கவலை அளிப்பதாகவும் ஏமாற்றம் அளிப்பதாகவும் உள்ளது.

இவ்வேளையில் வரலாற்றுரீதியான சில விடயங்களையும் சுட்டிக்காட்ட விழைகின்றோம். யுத்தம்உக்கிரமாக நடைபெற்றுக்கொண்டிருந்த காலத்தில் கூட மடுத் திருப்பதியின் திருவிழாக்களுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. அன்றைய அரசாங்கங்களும்சரி, தமிழீழ விடுதலைப் புலிகளும் சரி இத்திருவிழாக்களை எந்த இடையூறும் இல்லாமல் நடத்துவதற்கு தமது பூரண ஆதரவை, ஒத்துழைப்பை வழங்கிவந்தனர் என்பதை இவ்வேளையில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியினால் குறிப்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுமந்திரன் அவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இந்த ஹர்த்தாலை திருவிழாவுக்குப் பின்னர் வேறொரு நாளுக்கு பின்போடுமாறு வினயமாக வேண்டுகோள் விடுக்கின்றோம். புதிய திகதிக்கு இந்தக் ஹர்த்தால் மாற்றப்படும்போது வழக்கம்போல மன்னார் மறைமாவட்டடத் திருச்சபை இதற்கான பூரண ஆதரவை வழங்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். எமது இந்தக் கோரிக்கையை ஏற்று உடனடியாக புதிய திகதியை அறிவிக்குமாறு திரு. சுமந்திரன் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.

இது மன்னார் மறைமாவட்டக் குருமுதல்வர் அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார் வெளியிட்ட அறிக்கையின் ஒரு பகுதி. முத்தையன்கட்டில் ஒரு தமிழர் படைத்தரப்பினால் கொல்லப்பட்டதாகக் கூறப்படும் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து சுமந்திரன் ஒரு கடையடைப்புக்கு அழைப்பு விடுத்திருந்தார். எனினும் பின்னர் நல்லூர் திருவிழா, மடுப் பெருநாள் என்பவற்றைக் கவனத்தில் எடுத்து கடையடைப்பை மூன்று நாட்களுக்கு ஒத்தி வைத்திருக்கிறார்.

சுமந்திரன் ஒரு கிறிஸ்தவர். அவரைச் சுற்றி இருப்பவர்கள் யாருமே அவர் முதலில் கடையடைப்புக்கு அழைப்பு விடுத்த நாள் மடுமாதாவின் பெருநாள் என்பதனைச் சொல்லவில்லைப் போலும். அவரைச் சுற்றி இருந்த எந்த ஒரு இந்துவும் இது நல்லூர் திருவிழாக் காலம் என்பதனை அவருக்குச் சுட்டிக்காட்டி இருக்கவில்லை போலும். வடக்கில் இரண்டு பெரும் உற்சவங்கள். இந்த இரண்டுக்குமாக பல இடங்களிலிருந்தும் பேருந்துகள் பயணிகளை ஏற்றிக்கொண்டு வரும். குறிப்பாக மடுத் திருவிழா என்பது இனம் கடந்து, மதம் கடந்து அனு'டிக்கப்படுவது. நல்லூரும்தான்.

குறிப்பாக மடுவில் இந்து கிறிஸ்தவம் என்ற பேதம் இன்றி தமிழ் மக்கள் கூடுவார்கள். அங்கே திருவிழாவை முன்னிட்டு சில நாட்களுக்கு முன்னரே மடுவுக்கு போய் தங்கியிருக்கும் யாத்திரிகர்களும் உண்டு. எனவே மடுத் திருவிழா என்றால் நூற்றுக் கணக்கான பேருந்துகள் வடக்கிலிருந்து பெரிய மடுவை நோக்கி வரும். இந்தச் சிறிய விடயத்தை ஏன் சுமந்திரன் கவனத்திற் கொள்ளத் தவறினார்?

அப்படித்தான் நல்லூர்த் திருவிழாக் காலங்களிலும் பேருந்துகளில் ஜனத்தொகை பெருக்கமாக இருக்கும். திருவிழாக் காலங்களில் கடையை அடைக்குமாறு கேட்டால், பொதுப் போக்குவரத்தை நிறுத்தினால் என்ன நடக்கும்? இந்தச் சிறிய விடயங்களையெல்லாம் சுமந்திரனைச் சுற்றியிருப்பவர்கள் அவருக்குச்சொல்வதில்லையா? அல்லது யாரிடம் கேட்டு சுமந்திரன் இந்த முடிவுகளை எடுக்கின்றார்? அல்லது அவர் முடிவெடுக்கும் போது யாரிடமும் எதையும் கேட்பது இல்லையா?

அவர் மக்களால் தேர்வு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதி அல்ல. அவருடைய வார்த்தைகளில் சொன்னால் மக்களின் ஆணை அவருக்கு இல்லை. கட்சிக்குள்ளும் அவர் பதில் செயலாளர்தான். பதில்தான். ஆனால் அவர்தான் கட்சியின் முகமாக, கட்சியின் எல்லாமமாகத் தோன்றுகிறார். அண்மையில் அவர் லண்டனுக்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் போயிருந்தார். அங்கே அவர் அந்தந்த நாடுகளில் ராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேசியதாக அவருடைய அரசியலெதிரிகள் கூறுகிறார்கள். வரும் செப்டம்பர் மாதம் நடக்கவிருக்கும் ஜெனிவா கூட்டத் தொடரை முன்னிட்டு அவர் அவ்வாறு மேற்கத்திய ராஜதந்திரிகளைச் சந்தித்துப் பேசியதாகக் கூறப்படுகிறது.

அது தனிப்பட்ட பயணம் என்று சுமந்திரன் கூறியிருக்கிறார். ஆனால் அவர் ஐரோப்பிய நாடுகளில் ராஜதந்திரிகளைச் சந்தித்ததாகப் புலம்பெயர்ந்த தமிழர் தரப்புகள் கூறுகின்றன. அவை கூறுவது உண்மையாக இருந்தால் அவர் கட்சியின் அனுமதியோடுதான் அச்சந்திப்புகளில் ஈடுபட்டாரா? அங்கே என்ன கதைக்கவேண்டும் என்பதனை கட்சி ஏற்கனவே கூடி முடிவெடுத்திருந்ததா? அவ்வாறான சந்திப்புகளில் என்ன கதைக்கப்பட்டது என்பதனை அவர் கட்சிக்குத் தெரிவித்தவரா? அதை அவர் மக்களுக்குக் கூறத் தேவையில்லையா?

கடந்த 20 மாதங்களாக சுமந்திரனின் நகர்வுகளைத் தொகுத்துக் கவனிக்கும் எவரும் அவர் எல்லாவற்றையும் ஒரு நோக்கத்தோடுதான் செய்கிறார் என்பதனைக் கண்டுபிடிக்கலாம். கட்சிக்குள் தன்னைப் பலப்படுத்துவது; கட்சியின் முகமாகத் தொடர்ந்தும் பலம்பெறுவது; கட்சியின் தீர்மானங்களைத் தானே எடுப்பது் மத்திய குழுவை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது; எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கத்தக்கதாக கட்சி தொடர்பான ராஜதந்திர நகர்வுகளை தானே முன்னெடுப்பது...இதைத்தான் கடந்த 20 மாதங்களாக அவர் செய்து வருகிறார். கட்சிக்குள் யாரும் அதை எதிர்ப்பதாகத் தெரியவில்லை.

அவர் கடையடைப்புக்கு அழைப்பு விடுத்தது சரியானது. அதை மனோ கணேசனும் ஆதரித்திருந்தார். படையின் முகாம்கள் மக்கள் குடியிருப்புகள் மத்தியில் இருப்பதினால்தான் கடந்த வாரம் முல்லைதீவில் இடம்பெற்றது போன்ற சம்பவங்கள் நிகழ்வதாக சுமந்திரன் கூறுகிறார். எனவே படைமயக் குறைப்பை வலியுறுத்தி அவர் ஒரு கடையடைப்புக்கு அறிவித்தல் விடுத்திருக்கிறார்.

முதலாவதாக படைமயக் குறைப்புக்காக ஒரு போராட்டத்தை நடத்த வேண்டும் என்று முடிவு எடுத்தது சரியானது. படை மய நீக்கம் அவசியம். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின்னரும் கடந்த 16 ஆண்டுகளாக படைமய நீக்கம் முழுமையாக நிகழவில்லை. இலங்கையின் மொத்தப் படைக் கட்டமைப்பில் ஏறக்குறைய மூன்றில்இரண்டு பகுதி தமிழ் பகுதிகளில்தான் நிலை கொண்டிருக்கிறது என்று உத்தியோகப்பற்றற்ற புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன. எனவே படைமய நீக்கம் அவசியம். அதை வலியுறுத்தி தமிழ் மக்கள் போராட வேண்டியதும் அவசியம். அதில் யாருக்கும் சந்தேகம் இல்லை.

ஆனால் பிரச்சினை எங்கே வருகிறது என்றால், அதற்காக கடையடைப்பு ஒரு பொருத்தமான போராட்டமா என்பதுதான். அந்த கடை அடைப்பை எப்பொழுது நடத்துவது என்பதுதான். அந்த முடிவை கட்சிக்குள் யார் யார் எடுத்தார்கள் என்பதுதான். அந்த முடிவை எடுக்கும் பொழுது தான் வாழும் மக்கள் மத்தியில் உள்ள பெருவிழாக்கள் திருவிழாக்கள் தொடர்பாக கவனத்தில் எடுக்க முடியாத அளவுக்கு தங்கள் மக்களுடைய பண்பாட்டு உணர்வுகளிலிருந்து அவர்கள் விலகி இருந்தார்களா என்பதுதான்.

சுமந்திரனை எதிர்த்த பலரும் கடையடைப்பையும் எதிர்க்கிறார்கள். அது தவறு. அரசியலில் சில சமயம் பிழையான ஆட்கள் சரியான செயல்களைச் செய்வது உண்டு. கடையடைப்பு என்ற போராட்ட வடிவம் குறித்து கேள்விகளை எழுப்பலாம். வேறு போராட்ட வடிவங்களைக் குறித்துச் சிந்திக்கலாம். அரசாங்கத்துக்கு நோகக்கூடிய விதத்தில் அரசாங்கத்தை ஆதரிக்கும் நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் குறிப்பாக, ஐநாவின் கவனத்தை ஈர்க்கும்விதத்தில் அதைவிடக் குறிப்பாக ஐநாவில் தமிழ் மக்கள் தொடர்பான தீர்மானத்தைக் கொண்டுவர இருக்கும் "கோ குரூப்" நாடுகளின் கவனத்தை ஈர்க்கும் விதத்தில் அழுத்தங்களைப் பிரயோகிக்கத்தக்க போராட்ட வடிவங்களைச் சிந்திக்கலாம்.

அரசாங்கத்துக்கு நோகத்தக்க விதத்தில் போராடுவது என்று சொன்னால் மக்களைத் திரட்டி சம்பவம் நடந்த மாவட்டத்தில் ஒரு மக்கள் பேரெழுச்சியை ஒழுங்குபடுத்தலாம். அதை ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தலாம். இது முதலாவது. இரண்டாவதாக, அரசு அலுவலகங்களை முடக்கக்கூடிய விதத்தில் அரசு அலுவலகங்களைச் சுற்றி வளைக்கலாம். மூன்றாவதாக, ஐநாவில் முடிவெடுக்கும் நாடுகளின் தூதரகங்களின் முன்னாள் கவன ஈர்ப்புப் போராட்டங்களை ஒழுங்கு செய்யலாம். அந்தக் கவன ஈர்ப்புப் போராட்டங்கள் படைப்புத்திறன் மிக்கவைகளாக இருக்க வேண்டும். மனித உரிமைகள் ஆணையாளர் செம்மணிக்கு வந்த பொழுது நிகழ்த்தப்பட்ட அணையா விளக்கு போராட்டத்தைப் போல.

எனவே இதுபோன்ற பல வழிகளிலும் அரசாங்கத்துக்கு நோகக்கூடிய விதத்தில் போராடலாம். கடை அடைப்பு அழைப்பவருக்கு இலகுவான ஒரு போராட்டம். மாறாக, கடைகளை மூடும் வியாபாரிகளுக்கும் பொதுப் போக்குவரத்தை நிறுத்தும் தனியார் பேருந்து உரிமையாளர்களுக்கும் அன்றாடம் காய்சிகளுக்கும் அன்றாடம் வேலை செய்பவர்களுக்கும் அதனால் இழப்பு ஏற்படும். அந்த இழப்பைக்கூட நாட்டுக்காக ஒருநாள் செய்யும் தியாகம் என்று நியாயப்படுத்த முடியும். ஆனால் கடை அடைப்போ அல்லது பொது முடக்கமோ எதுவாக இருந்தாலும் அது அரசாங்கத்துக்கு நோக வேண்டும். அரசாங்கத்துக்கு நோகக் கூடிய விதத்தில் அழுத்தமாகப் போராட வேண்டும்.

அப்படிப் பார்த்தால் கடையடைப்பு அரசு அலுவலகங்களுக்கு நோகாது. ஏனென்றால் கடையை அடைத்தாலும் பொதுப் போக்குவரத்தை முடக்கினாலும் அரச அலுவலகங்கள் தொடர்ந்து இயங்கும். ஏன் பாடசாலைகளே இயங்கும். ஆசிரியர்கள் வருவார்கள்; அதிபர்கள் வருவார்கள்; மாணவர்கள் மட்டும் வர மாட்டார்கள். எனவே கடையடைப்பைவிட அழுத்தமான, கூர்மையான படைப்புத்திறன்மிக்க அறவழிப் போராட்டங்களை சிந்தித்து முடிவெடுக்க வேண்டும். அதற்குக் கூடிக் கதைக்க வேண்டும். அதைவிட முக்கியமாக தமது சொந்த மக்களை நேசிக்க வேண்டும். உண்மையாக நேசிக்க வேண்டும். தனது மக்களை விசுவாசிக்கும் எந்த ஒரு செயற்பாட்டாளருக்கும் போராட்டத்தின் வழி தானாகத் திறக்கும்.

ஆனால் சுமந்திரனின் போராட்டத்தை அவரை விமர்சிப்பவர்கள் அவ்வாறு பார்க்கவில்லை. அவர் மக்களுக்காகப் போராடவில்லை. அல்லது பாதிக்கப்பட்ட குடும்பத்துக்காகப் போராடவில்லை. அல்லது படை மய நீக்கத்துக்காக உண்மையாகப்போராடவில்லை. மாறாக கட்சிக்குள் தன் முதன்மையைப் பலப்படுத்தவும் தமிழ்த் தேசிய அரசியலில் தன்னுடைய இன்றியமையாமையை நிருபிப்பதற்கும் அவர் இந்தப் போராட்டத்தைப் பயன்படுத்துகிறார் என்றுதான் அவர்கள் விமர்சிக்கின்றார்கள்.

அவ்வாறு விமர்சிக்கத்தக்க விதத்தில்தான் அவருடைய நடவடிக்கைகளும் காணப்படுகின்றன. கடந்த வாரம் ஐநாவுக்கு ஒரு கடிதம் அனுப்பப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சிவில் சமூகங்களோடு இணைந்து அந்தக் கடிதத்தைத் தயாரித்தது. அந்தக் கடிதத்தில் தமிழரசுக் கட்சி கையெழுத்துப் போடவில்லை. அந்த முடிவைப் பெரும்பாலும் சுமந்திரனே எடுத்திருப்பதாகக் கருதப்படுகிறது. அவர் சொன்னதைச் சிவஞானம் திரும்பிச் சொல்கிறார் என்றுதான் எல்லாரும் நம்புகிறார்கள். எனவே இந்த விடயத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோடு இணைந்து ஒரு கூட்டுக் கடிதத்தை அனுப்புவதற்கு சுமந்திரன் தயாராக இருக்கவில்லை. அந்த விடயத்தில் தமிழ்த் தேசியக் கட்சிகளோடு இணைந்து முடிவெடுத்திருந்திருந்தால் இன்றைக்கு கடையடைப்பை அல்லது அதுபோன்ற ஏதோ ஒரு போராட்டத்தை எல்லாருமாகச் சேர்ந்து தரமாகச் செய்திருக்கலாம். அதற்குத் தமிழரசுக் கட்சியின் ஈகோ இடம் கொடுக்கவில்லை.

ஆனால் அதற்கு சுமந்திரன் ஒவ்வொரு நாளும் காணொளியில் வந்து விளக்கம் கொடுக்கிறார். அவர் தரும் விளக்கங்களில் முக்கியமானது, நாங்களே பெரிய கட்சி நாங்களே முதன்மைக் கட்சி எனவே நீங்கள் கடிதத்தை எழுதிவிட்டு எங்களை அதில் கையெழுத்துப் போடுமாறு கேட்க முடியாது என்ற பொருள்பட அமைந்துள்ள விளக்கங்கள்தான். அதில் ஒரு பகுதி உண்மை. அவர்கள்தான் பெரிய கட்சி அவர்கள்தான் முதன்மைக் கட்சி. அதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. ஆனால் இங்கே கேள்வி என்னவென்றால், கடந்த 16 ஆண்டுகளாக அவர்களே முதன்மைக் கட்சியாகவும் முடிவெடுக்கும் கட்சியாகவும் இருந்து தமிழ் மக்களுக்கு செய்த நன்மைகள் என்ன? கடந்த 16 ஆண்டுகாலத் தமிழரசியலில் ஏற்பட்ட தேக்கங்கள், தோல்விகள், பின்னடைவுகள் போன்ற எல்லாவற்றிற்கும் அவர்கள்தான் பொறுப்பேற்க வேண்டும். அது மட்டுமல்ல அனைத்துலக அளவில் குறிப்பாக ஐநாவில் தமிழ் மக்களின் விவகாரம் மேலும் நீர்த்துப்போகக்கூடிய ஆபத்து தெரிகிறது. அதற்கும் தமிழரசுக் கட்சிதான் பொறுப்பேற்க வேண்டும். ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்தபொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஐக்கிய அமைப்பு ஒன்று இருந்தது. அது உடைந்து போனதுக்கும் தமிழரசுக் கட்சிதான் பொறுப்புக் கூற வேண்டும். எனவே கடந்த 16 ஆண்டுகளிலும் தங்களைப் பெரிய கட்சி, தலைமைக் கட்சி என்றெல்லாம் கூறிக்கொள்ளும் அவர்கள் கடந்த 16 ஆண்டு காலத் தோல்விகளுக்கும் பொறுப்பேற்பார்களா?

# கனடா-பிரம்ரன் அருள்மிகு ஸ்ரீ கற்பக விநாயகர் ஆலயம்








## 24வது வருடமாக நடைபெறும்

# தங்கரதப் பெருவிழா









எதிர்வரும் குரோதி வருஷம் August மாதம் 14,15,16ம் திகதிகளில் 24வது தடவையாக நடைபெறுகின்ற ஆடிவேல் பெருவிழா திருவருள் கைகூடியுள்ளது.

3 தினங்கள் 14,15,16ம் திகதிகளில் முருகப் பெருமானுக்கு அபிஷேகமும் விஷேட தீபாரா தனைகளும் பக்தி பூர்வமாக இசைநிகழ்ச்சிகளும் நடைபெறும் . 3வது நாளாகிய 16ம் திகதி சனிக்கிழமை மாலை 5:00 மணிக்கு முருகப் பெருமானுக்கு அபிஷேகமும் தொடர்ந்து திருவூஞ்சலில் எழுந்தருளி விஷேட தீபாரா தனையும் சண்முக அர்சனையும் , சுப்பசிங்கர் கலைஞர்களும் மற்றும் கனேடிய கலைஞர்களும் கலந்து சிறப்பிக்கின்ற நிகழ்வுகளும், மயில்நாட்டிய உபசாரத்தோடும் 20 க்கு மேற்பட்ட இலங்கை இந்திய நாதஸ்வர தவில் இசையோடு அழகிய மின்விளக்குகளினால் அலங்கரிக்கப் பட்ட தங்கரதத்தில் வீதி உலா வந்து வடக்கு வீதியில் சிறுவர்களை கொள்ளை கொள்ளும் வாண வேடிக்கைகளோடும் சண்முகப் பொருமான் பிராயச்சித்த அபிஷேகத்தோடு ஆடிவேல் பெருவிழா பூர்த்தியாகும். அனைவரும் கலந்து கொண்டு சண்முகப் பெருமானின் நல்லருள் பெற்று உய்வீர்களாக.

**200 Advance Blvd, Brampton, ON L6T 4V4 | Tel: (905) 458-9701 | (416) 471-0255**
**www.srikatpagavinayagar.ca | www.srikatpagavinayagar.com**

இங்ஙனம் தேவஸ்தான தர்மகர்த்தா கணகுக சிவத்தொண்டன் இரா விஜயநாதன்

## Carefirst Family Health Team

Carefirst Family Health Team

**Accepting New Patients**
**புதிய நோயாளர்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர்**

- அனுபவமுள்ள தமிழ் பேசும் பெண் குடும்ப மருத்துவர் எங்களது ஸ்கார்பரோ கிளினிக்கில் இணைந்துள்ளார். (Scarborough Clinic)
- உங்களது சுகாதார சேவைகளைப்பூர்த்தி செய்ய கார்த்திருக்கிறார்.
- நீரழிவு இருப்பின் அது சம்பந்தமான கல்வித்திட்டமும் அவரால் ஒழுங்கு செய்து தரப்படும்.
- நாள்பட்ட நோய்க்கான கல்வியும் (chronic disease), மேலாண்மை திட்டங்களும் அவரால் வழங்கப்படும்.



அவர் விபரம்:


டாக்டர் அஞ்சலின் ராஜரத்தினம் (Scarborough Clinic)

டாக்டர். ராஜரத்தினம் அக்கறையும் அர்ப்பணிப்பும் கொண்ட குடும்ப மருத்துவர் ஆவர்.

**உங்கள் குடும்ப மருத்துவத்தேவை, மற்றும் டாக்டர் ராஜரத்தினத்தின் நோயாளியாக பதிவு செய்ய விரும்பினால், கீழே உள்ள QR குறியீட்டை ஸ்கேன் செய்யவும் அல்லது https://forms.office.com/r/upqD0q5TGL க்குச் சென்று படிவத்தை நிரப்பவும் உங்கள் சுயவிவரத்தை உருவாக்க எங்களுக்கு உதவ, உங்கள் விபரங்களை பதிவு செய்யுங்கள்.**

Availability of New Family Doctor at Carefirst Family Health Team - Dr. Rajaratnam

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi-Services Centre**
**300 Silver Star Blvd., 2/F**
**Scarborough, ON M1V 0G2**
**Tel: (416)502-2029**
**www.carefirstontario.ca**




11/24

## Skandavarodaya Old Students' Association - Canada

ஸ்கந்தவரோதயா பழைய மாணவர் சங்கம் - கனடா

**Summer Get - Together 2025 & Annual General Meeting**

**August 30, 2025, Sunday 10 am**

**Milliken Park Picnic Site 2**

**5555 Steeles Ave. East, Scarborough (McCowan & Steeles)**

**Contact:**
Jeyadevi 647 454 9617
Judita 416 402 4495





**Lots of Games, Prizes & Food**

**For A fun filled day, Please Join us with your Family and friends**





ரொறன்ரோ

## ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி




**4 வயது (Junior Kindergarten) முதல் 14 வயது (8 ம் வகுப்பு) வரையிலான மாணவர்களுக்கான**

# தமிழ், சமய, பண்ணிசை

## வகுப்புக்கள் 07.09.2025 ஆரம்பம்

**எமது மொழி, கலை, கலாச்சாரம், பண்பாடு, தியானம், நற்பழக்கம், இறைவழிபாடு ஆகியவற்றை எமது குழந்தைகள் அறிந்து அதன்படி ஒழுக வேண்டும் என்ற உயரிய குறிக்கோளுடன் ஸ்ரீ வரசித்தி விநாயகர் இந்துக்கல்லூரி கடந்த 19 வருடங்களாக சிறப்புற நடைபெற்றுவருகின்றது.**

**புதிய மாணவர்களுக்கான விண்ணப்பப் பதிவினை www.varasiththi.com இணையத்தளத்தில் மேற்கொள்ளலாம். நேரடியான பதிவு 23.08.2025 சனிக்கிழமை இந்துக்கல்லூரியில் காலை 10:00 மணிமுதல் 1:00 மணிவரை நடைபெறும்.**




**வகுப்புக்கள் நடைபெறும் நேரம்**
ஞாயிற்றுக்கிழமை காலை 9:15 முதல் 12:45 வரை
ஞாயிற்றுக்கிழமை மதியம் 1:15 முதல் 4:45 வரை




**Sri Varasiththi Vinaayagar Hindu College**
3039 KENNEDY ROAD, SCARBOROUGH, ON M1V1S7 CANADA.
416.291.7900, 647.336.3333, 416-291-8500

WWW.VARASITHTHI.COM VARASITHTHI@GMAIL.COM VARASITHTHI


Nathaswara Thavil Music Of Global Inc.
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
28th ANNIVERSARY
தவில் வித்வான் கலைமாமணி
திருப்புன்கூர்
திரு. T.G முத்துக்குமாரசாமி அவர்கள்
நாதஸ்வர வித்வான் கலாநிதி
M.P நாகேந்திரன் அவர்கள்
நாதஸ்வர வித்வான்
M.P N நிருபன் அவர்கள்
தவில் வித்துவான் லயஞானதிலகம்
காவாலம்
திரு. B. ஸ்ரீகுமார் அவர்கள்
திரு. T.A.K.சண்முகநாதன்
திரு. D.பாபு
திரு. K.S.K.மணிகண்டன்
திரு. A.K.ஜயப்பன்
திரு K.A நந்தீஸ்குமார்
திரு.S.சந்தானபாரதி
திரு S.லக்சுமிநரேசையா
திரு V. ராஜா
திரு M. கிருஷ்ணா
திரு S. மணிகண்டன்
திரு.J.சூரியகுமார்
திரு G. பிரேம்குமார்
திரு D. வினோத்
மோர்சிங்
திரு K.S.பாலாஜி சாய்ராம்
நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு 28வது வருட விழாவை இவ்வருடம் ஓகஸ்ட் மாதம் 30ஆம் தேதி கொண்டாடுகிறது. இவ்விழாவை சிறப்பிக்க இந்தியாவில் இருந்து சிறப்பு வருகை தருகிறார். தவில் வித்வான் கலைமாமணி திருப்புன்கூர் T.G. முத்துகுமாரசுவாமி அவர்களும் சாவகச்சேரி மற்றும் ரொறன்ரோ நாதஸ்வர வித்வான் கலாநிதி M.P. நாகேந்திரன் அவர்களும் அத்துடன் தவில் வித்துவான் காவாலம் திரு. B. ஸ்ரீகுமார் அவர்களும் அத்தோடு இடும்பவனம் திரு. K.S.K. மணிகண்டன் அவர்களும் இந்தியாவில் இருந்து வருகைதந்திருக்கும் வித்வான்களும் Toronto நாதஸ்வர தவில் வித்வான்களும் இணைந்து மங்கள இசையை சிறப்பிக்க உள்ளார்கள் அனைத்து குருமார்கள் நாதஸ்வர தவில் கலைஞர்கள் மற்றும் ரசிக பெருமக்கள் அனைவரையும் வருக வருக என நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு வரவேற்கிறது.
இடம் :
SRI SATHYA SAI BABA CENTRE
5321 Finch Ave E, Scarborough, ON M1S 5W2
Intersection: Middlefield & Finch
காலம் : Aug-30-2025 சனிக்கிழமை
நேரம் : மாலை, 4.30 மணிக்கு ஆரம்பம்
அனுமதி இலவசம்
ANALAI EXPRESS
Analaiexpress TV
Analaiexpress Facebook
விபரங்களுக்கு: நாதஸ்வர தவில் இசை சர்வதேச அமைப்பு
DR. ஆ. முருகதாஸ் Tel:416-420-1309 / 289-660-3850
Email: ntm97@yahoo.com web:www.nathaswarathavil.org
Design and Print By Designs 2 Print @ Majestic City : Prabagar - 647.858.2290 / 416 292 4999 / www.designs2prints.com


31 Anniversary Grand Sale
SAMY & SONS
S & S
Since 1994
Wholesalers & Retailers
GRAND SALE
31th JULY to 31th AUGUST
Reliable
Trustworthy
Friendly
Textiles, Jewellery, Gift Items & Fancy Goods
Express Money Transfer,
Pawn Broker Interst Offer Price 2%, Etc.
Quality
Quantity
Discounts
BLOWOUT SALE EVERYTHING MUST GO
$33
Premier
$48
Preethi Eco Plus 3 jar
$130
$125
9 piece
EACH $7.00
Saree Blouses,
Saree Underskirts,
Senorita Bras,
Saarams, Skirts,
T-Shirts,
and many more!
NEW ARRIVALS
Pattus Cut Works,
Bridal Soft Silks.
Sequins, &
Cotton Sarees,
Special Salwars
Fancy Lengha Suits,
Kurtha Blouses,
Kurtha Suits,
and many more!
All Unbelievable Blowout Prices
EACH $12.00
Kurtha Tops,
Kurtha Shirts (Men),
Denim Pants,
Dress Pants,
Shirts(Men),
Fancy Frocks(Kids),
Salwars (All Sizes).
Milk Cooker,
Appa Chatti,
Puttu Kudam,
Archunai Basket,
Kundu Dosa Chatti,
Coconut Scrapper.
Steamer $29.00
Banana Leaf Plate $3.50
3 Set Satti $15.00
Silver or Brass Thattus
and more
Many More
Items on Sale
First 25 Customers Get a Free Rice Cooker if Purchase is Over $300
Only for Cloth Items
Fancy Items From 50¢
Tel: 416-298-1598
Cell: 647-239-SAMY (7269)
1884 Kennedy Road (at Ellesmere)
Scarborough, Ontario M1P 2L8
www.samyandsons.com Email: samyandsons@gmail.com
First 25 Customers Get a Free Hot Box if Purchase is Over $150
Only for Cloth Items
அன்றும், இன்றும், என்றும் ஒரே குடையின் கீழ் சாமி அன்ட் சன்ஸ்
SALE! SALE!! SALE!!!

கனடிய செய்திகள் Canadian News

# "நம்மை தாமதமாக வந்தடையும் முதுமை என்பது ஒரு பெருமைக்குரிய பராயம் என்பதை உணரவேண்டும்"

## மார்க்கம் – மிடில்பீல்ட் தமிழ் மூத்தோர் சங்கம் நடத்திய ஒன்றுகூடலில் உரையாற்றிய "உதயன்" லோகேந்திரலிங்கம் புகழாரம்



"நாம் பிறக்கும் நாளிலிருந்து சில பராயங்களைக் கடந்த வண்ணம் வாழ்க்கையை அனுபவித்து வாழும் நம்மை இறுதியில் அணைக்கின்ற பராயம் தான் முதுமை. இவ்வாறு பல வருடங்களைக் கடந்து தாமதமாக வந்தடையும் முதுமை என்பது ஒரு பெருமைக்குரிய பராயம் என்பதை உணரவேண்டும். காரணம் "மூத்தோர் சொல்லும் முது நெல்லிக் கனியும் முன்னால் கசக்கும் பின்னால் இனிக்கும்" என்ற கூற்றுக்கு இணங்க மூத்தோரின் அறிவுரைகளை நிதானமாகக் கேட்டு நடந்தால் நன்மையே நிகழும் தவிர தீது ஒன்றும் இல்லை."

இவ்வாறு, 14ம் திகதி வியாழக்கிழமை மதியம் மார்க்கம் நகரில் அமைந்துள்ள "அனி" சன சமூக நிலைய கூட்ட அறையில் மார்க்கம் - மிடில்பீல்ட் தமிழ் மூத்தோர் சங்கம் நடத்திய ஒன்றுகூடலில் உரையாற்றிய "உதயன்" லோகேந்திரலிங்கம் அங்கு கலந்து கொண்ட மூத்தோர் மற்றும் சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் மத்தியில் தெரிவித்தார்.

மார்க்கம் - மிடில்பீல்ட் தமிழ் மூத்தோர் சங்கத்தின் தற்போதைய தலைவர் திரு டேவிற் தலைமையில் நடைபெற்ற இந்த ஒன்றுகூடலில் சுமார் 40 அங்கத்தவர்களின் கனடிய அரசின் நிதி ஒதுக்கீட்டில் சிறிய கைக் கணணிகள் (Tablets) வழங்கப்பெற்றன. இந்த அன்பளிப்புக்கள் பெற்றுக்கொண்டவர்கள் மத்தியிலும் ஏனையோருக்கும் மத்தியில் பரவசத்தை ஏற்படுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது.









"உதயன்" லோகேந்திரலிங்கம் சிறப்புப் பேச்சாளராக அங்கு கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றுகையில் சில சந்தர்ப்பங்களில் முத்தோர் என்ற பராயத்தை அடையும் எம்மவர்களில் சிலருக்கு தலைமுறை இடைவெளி காரணமாக குடும்ப உறவுகள் மத்தியில் அல்லது நட்பு வட்டாரத்தில் கருத்து வேறுபாடுகள் பாதகமான விரிசல்களை ஏற்படுத்தினாலும் எமது மூத்தோர் பெருமைக்குரிய பராயத்தில் நாம் வாழ்ந்து கொண்டிரக்கின்றோம் என்று ஆறுதல் அடைய வேண்டும்" என்றார்.

நீண்ட காலமாக வெற்றிகரமாக இயங்கிவரும் இந்த மார்க்கம் - மிடில்பீல்ட் தமிழ் மூத்தோர் சங்கமானது தொடர்ச்சியாக பல நற்பணிகளை ஆற்றிவருவதும் பேச்சாளர்களை அழைத்து அவர்களின் உரைகளை கேட்டு உற்சாகமடைந்து செல்வது கடந்த பல வருடங்களாக இடம்பெறும் நிகழ்ச்சிகள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடிய செய்திகள் Canadian News

# "இளைய தலைமுறையினருக்கு திருக்குறள் மீதான தேடலை ஏற்படுத்த கனடாவில் நடைபெறவுள்ள "அனைத்துலக திருக்குறள் மாநாடு" வழிவகுக்கும் என்ற நம்பிக்கையோடு செயற்படுகின்றோம்"



## செப்டம்பர் 2025ல் ரொறன்ரோ பல்கலைக் கழக ஸ்காபுறோ வளாகத்தில் நடைபெறவுள்ள "அனைத்துலக திருக்குறள் மாநாடு" தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பில் வைத்திய கலாநிதி லம்போதரன் தெரிவிப்பு

"கனடாவில் மாத்திரமல்ல உலகின் பல நாடுகளில் வாழும் எம் இளைய தலைமுறையினருக்கு திருக்குறள் மீதான தேடலை ஏற்படுத்த வேண்டும் என்பதோடு திருவள்ளுவர் எமக்காக படைத்தளித்த இந்த உலகப் பொதுநூலின் உள்ளடக்கங்களையும் கருத்துச் செறிவுகளையும் அவர்கள் கற்றுணரவேண்டும் என்பதும் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 19ம். 20ம் 21ம் திகதிகளில் கனடா ஸ்காபுறோ நகரில் அமைந்துள்ள ரொறன்ரோ பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெறவுள்ள "அனைத்துலக திருக்குறள் மாநாடு" வழிவகுக்கும் என்ற நம்பிக்கையோடு கனடாவில் இயங்கிவரும் மாநாட்டுக் குழுவினராகிய நாம் செயற்படுகின்றோம். எனவே கற்றறிந்த பெரியோர்கள்களும் கற்கத் துடிக்கும் இளைய தலைமுறையினரும் மாநாட்டில் கலந்து கொள்ள வேண்டும் என்றும் அது சிறப்புற நடைபெற ஒவ்வொருவரும் தங்கள் ஒத்துழைப்பையும் வழங்க வெண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம்"




இவ்வாறு எதிர்வரும் செப்டம்பர் 2025ல் ரொறன்ரோ பல்கலைக் கழக ஸ்காபுறோ வளாகத்தில் நடைபெறவுள்ள "அனைத்துலக திருக்குறள் மாநாடு" தொடர்பான பத்திரிகையாளர் சந்திப்பில் வைத்திய கலாநிதி லம்போதரன் உரையாற்றுகையில் மிகுந்த உற்சாகத்தோடு தெரிவித்தார்.

மேற்படி அனைத்துலக திருக்குறள் மாநாடானது. ரொறன்ரோ தமிழ்ச் சங்கம். மற்றும் ஆசிய கற்கைகளுக்கான நிறுவனம் மற்றும் "ஈகை" சமூக நிறுவனமும் இணைந்து நடத்தும் வகையில் ஏற்பாடுகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இந்த மாநாட்டு ஏற்பாட்டுக்குழுவின் சார்பிலும் ரொறன்ரோ தமிழ்ச் சங்கத்தின் சார்பிலும் வைத்திய கலாநிதி அங்கு தனது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டார்.



மாநாட்டுக் குழுவின் இணைப்பாளரான சிவன் இளங்கோ மற்றும் கலாநிதி நா. சுப்பிரமணியன் அவர்கள் ஆகியோர் இந்த பத்திரிகையாளர் சந்திப்பை ஸ்காபுறோ தமிழிசைக் கலாமன்றத்தின் கலாச்சார மண்டபத்தில் புதன்கிழமை 13ம் திகதி மாலை நடத்தினர் நடத்தினர்.



மேற்படி சந்திப்பில் பலரும் கலந்து கொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்க்ளைப் பகிர்ந்து கொண்டனர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

# பிரதி பாதுகாப்பு அமைச்சர் மனித உரிமை மீ – றலில் ஈடுபட்டிருந்தால் நம்பிக்கையில்லா பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்போம் என்கிறார் எம்.பி சிறிநேசன்



கிழக்கு மாகாணத்தில் இராணுவ தளபதியாக பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுர ஜெயசேகர செயற்பட்டு இருந்தபோது மனித உரிமை மீறல் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் தொடர்பு பட்டிருப்பதாக கட்சி ஆய்வின்படி நிருபிக்கப்படுமாக இருந்தால் அவருக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள நம்பிக்கை இல்லா தீர்மானத்திற்கு ஆதரவாக தமிழரசு கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்களிப் போம் என நாடாளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்தார்.

மட்டக்களப்பிலுள்ள அவரது காரியாலயத்தில் 14ம் திகதி அன்று வியாழக்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போது ஊடகவியலாளர் கேள்விக்கு அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அனுரஜெயசேகரவுக்கு எதிராக நம்பிக்கை இல்லா பிரேரணை தீர்மானத்தை எதிர்கட்சியினர் கொண்டுவர இருக்கின்றனர். இது தொடர்பாக தமிழரசு கட்சியை பொறுத்தமட்டில் எவ்வாறு நடந்து கொள்வது பற்றிய கேள்வி எழுந்துள்ளது இது விடயம் தொடர்பாக தமிழரசு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றாக கூடி கலந்து ஆலோசிக்க வேண்டி உள்ளது.

உண்மையில் அனுர ஜெயசேகர கிழக்கு மாகாணத்தில் இராணுவ தளபதியாக இருக்கும் போது அவர் எவ்வாறு நடந்து கொண்டிருக்கிறார் என்ற விஷ யம் ஆராயப்பட வேண்டும். அவர் அக்காலத்தில் தமிழ் மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடிய விடையத்தில் செயல்பட்டு இருந்தால் அதற்கு உரிய ஆதாரங்கள் இருக்குமாக இருந்தால் அதை எதிர்க்க வேண்டிய கட்டத்தில் இருக்கிறோம்.

தேசிய மக்கள் சக்தியானது தங்கள் பக்கம் இருக்கின்றவர்கள் ஊழல் மோசடி இலஞ்சம் இல்லாத சுத்தமானவர்கள் தூய்மையானவர்கள் என கூறி வருகின்றனர். அது உண்மை என்பதை உறுதிப்படுத்த வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இருக்கிறது.

எனவே அவர்களுடைய கருத்துக்களையும் எதிர்க்கட்சி கூறுகின்ற கருத்துக்களையும் ஆராய வேண்டியுள்ளதுடன். அவர் உண்மையில் தமிழ் மக்களை பாதிக்க கூடிய விதத்தில் மற்றும் உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் சட்டவிரோதமான செயற்பாட்டில் உடன் பட்டிருந்தால் எமது கட்சி ஆய்வின்படி நிருபிக்கப்படுமாக இருந்தால் நம்பிக்கை இல்லா தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிப்போம்.

அதேவேளை அவ்வாறு சம்பந்தப்படவில்லை என்கிற விஷயம் ஆதார பூர்வமாக நிருபிக்கப்படுமாக இருந்தால் அது தொடர்பாக எமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூடி ஆதரிப்பதா? எதிர்ப்பதா? புறக்கணிப்பதா? என தீர்மானத்தை எடுப்போம்.

அதேவேளை ஆளும் கட்சி எதிர்க்கட்சியின் வாதங்களின் கருத்துக்களை பார்க்க வேண்டியுள்ளது. கடந்த காலத்தில் இருந்த இராணுவ தளபதிகள் மனித உரிமைகளை மீறியுள்ளனர் புதைகுழி விஷயத்தில் கூட அப்போது இருந்தவர்கள் மனித உரிமைகளை மீறி அப்பாவி மக்களை புதைகுழிக்குள் புதைத்துள்ளனர்.

தேசபந்து தென்னக்கோன் பற்றி பல ஆதாரங்கள் கிடைத்தது எனவே அவரை பதவியில் இருந்து நீக்குவது தொடர்பாக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு நாங்கள் ஆதரவு கொடுத்தோம் ஏன் என்றால் அவர் கடந்த காலத்தில் அரசியல் மயப்படுத்தப்பட்ட ஒரு கட்சியின் ஒரு பொலிஸ் மா அதிபராக இருந்துள்ளார். அதனால் அவருக்கு எதிராக கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவு வழங்கினோம். என்றார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# ஜனநாயக வழி போராட்டம் வன்முறை வழி நோக்கி செல்லாதிருக்க அரசு அவதானம் செலுத்த வேண்டும்

## வலி வடக்கு மீழ் குடியேற்ற சங்க உறுப்பினர் அன்ரனி சுபாஸ்!



வலி வடக்கு மக்களின் உணர்வுகளில் அரசும் அரச அதிகாரிகளும் அக்கறை கொண்டு அவர்கள் முன்னெடுத்துவரும் ஜனநாயக வழி போராட்டம் வன்முறை வழி நோக்கி செல்லாதிருக்க அரசு அவதானம் செலுத்த வேண்டும் என வலி வடக்கு மீழ் குடியேற்ற சங்க உறுப்பினர் அன்ரனி சுபாஸ் வலியுறுத்தியுள்ளார்.

காணிகளை இழந்த வலி வடக்கு உரிமையார்கள் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதியில் 14ம் திகதி வியாழக்கிழமை அன்று ஊடக சந்திபொன்றை மேற்கொண்டநர்.

இதன்போது காணிகளை இழந்த வலி வடக்கு உரிமையார்களால் கடந்த சில நாட்ளுக்கு முன்னர் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களிலும், ருசே காரியாலயம் மற்றும் மனித உரிமை தலைமை காரியாலயம் ஆகியவற்றில், வலிவடக்கு காணி விடுவிப்பு தொடர்பில் மேற்கொண்ட பரிந்துரை செயற்பாடுகள் தொடர்பாக தெளிவூட்டுகையில் இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில், நாம் எமது பூர்வீக நிலங்களையே மீளப்பெறும் நோக்குடன் கடந்த 35 வருடங்களுக்கு மேலாக போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றோம்.

ஆனால் அரசுகள் மாறினாலும் அரச பொறிமுறையிலோ அரச அதிகாரிகளின் மனோநிலையிலோ மாற்றங்கள் ஏதும் இல்லாதுள்ளது.

நாம் எமது நிலத்துக்காம போராடிப் போராடி சந்ததிகளை கடந்துகொண்டிருக்கின்றோம். அதவிட ஏமாற்றப்பட்டுக் கொண்டிருக்கின்றோம் என்பதே உண்மை.

எமது ஜனநாயக வழி போராட்டத்தை தொடர்ந்தும் அரசு கண்டுகொள்ளாமல் இருக்குமானால் அது கடந்த காலங்கள் போன்று வன்முறை வழிமுறைக்கும் செல்லும் ஆபத்து இருக்கின்றது.

இந்த மாற்றங்கள் உருவாகாது தீர்வை கொடுக்கவேண்டியது அரசின் பொறுப்பாகும்.

நாம் தொடர்ந்தும் அகிம்சைவழியிலா அல்லது வன்முறை வழியிலா போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கவேண்டுதது இன்றைய அரசின் பொறிமுறையில்தான் உள்ளது என்றும் அவர் தெரிவித்திருந்தமை குறிபிடத்தக்கது.

# மட்டுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையம் இயக்கப்படவேண்டும் என வடக்கின் ஆளுநர் வலியுறுத்து!



மட்டுவிலில் அமைந்துள்ள யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையம் இயக்கப் படவேண்டும் என வலியுறுத்திய வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்கள், அடுத்த மாத இறுதியிலிருந்து அதனை இயக்குவதாக வர்த்தக வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி கௌரவ அமைச்சர் வசந்த சமரசிங்க குறிப்பிட்டமைக்கு நன்றிகளையும் தெரிவித்தார்.

பொருளாதார மத்திய நிலையத்தை மீளச் செயற்படுத்துவது தொடர்பில் ஆராயும் கலந்துரையாடல் யாழ். மாவட்டச் செயலகத்தில் 12ம்திகதி அன்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது.

யாழ். மாவட்டச் செயலர் ம.பிரதீபனின் வரவேற்புரையைத் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஆளுநர், யாழ். மாவட்டத்தில் விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு நிலையான விலை கிடைப்பதில்லை என்பதைக் கருதிலெடுத்தே இந்தப் பொருளாதார மத்திய நிலையம் உருவாக்கப்பட்டது. மூன்றாம் நபர் தலையீடின்றி விவசாயிகள் தங்கள் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்தவேண்டும் என்ற எதிர்பார்ப்பும் எங்களுக்கு இருந்தது. போருக்கு முன்னைய காலங்களில் கிளிநொச்சியில் இரவு நேரச் சந்தை கூட இருந்தது. தென்பகுதியிலிருந்து வரும் வர்த்தகர்கள் அங்க பொருட்களைக் கொள்வனவு செய்து சென்றமையும் நடந்தது. இந்தப் பொருளாதார மத்திய நிலையத்தை எவ்வளவு விரைவாக மீள ஆரம்பிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக ஆரம்பிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அமைச்சர் வசந்த சமரசிங்க தனது ஆரம்ப உரையில், வடக்கில் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா ஆகிய மூன்று மாவட்டங்களிலும் உள்ள பொருளாதார மத்திய நிலையங்களை மீள ஆரம்பிப்பதே எமது திட்டம். யாழ்ப்பாணம் பொருளாதார மத்திய நிலையத்துக்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுத்து அடுத்த மாத இறுதியில் அதனை ஆரம்பிப்பதே எமது திட்டம். அதேவேளை நாட்டிலுள்ள அனைத்து பொருளாதார மத்திய நிலையங்களையும் ஒரு நிறுவனமாக்குவதற்கான யோசனையும் முன்மொழியப்பட்டிருக்கின்றது என்று குறிப்பிட்டார்.

பொருளாதார மத்திய நிலையத்தில் கடைகளை குத்தகைக்கு பெற்றுக்கொண்ட வர்த்தகர்கள் தமது நிலைப்பாடுகளை முன்வைத்தனர். தமக்குரிய வசதிகளை ஒழுங்குபடுத்தித் தருவதுடன், தமது நிலையத்தை பிரபல்யப்படுத்தித்தர வேண்டும் என்றும் கோரினர்.

வடக்குக் கூட்டுறவு அபிவிருத்தி வங்கியின் தலைவர் கலாநிதி அகிலன் கதிர்காமர், கடந்த பல ஆண்டுகளாக பொருளாதார மத்திய நிலையம் செயற்படுத்தப்படாமல் இருந்தமைக்கு அதிகாரிகளின் அசிரத்தையும் காரணம் எனக் குறிப்பிட்டார். மேலும் நீண்ட காலம் வைத்துப் பயன்படுத்தக் கூடிய விவசாய உற்பத்திப் பொருட்கள் விற்பனையை முதலில் ஆரம்பிக்க வேண்டும் எனக் குறிப்பிட்டார். அத்துடன் இந்தப் பொருளாதார மத்திய நிலையத்துக்கான எண்ணக்கருவின் அடிப்படையில் மாவட்டத்தில் சில இடங்களில் சேகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு அங்கிருந்து இந்தப் பொருளாதார மத்திய நிலையத்துக்கு விவசாய உற்பத்திப் பொருட்கள் கொண்டு வரப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

வடமாரட்சி, தென்மராட்சி, வலிகாமம் என மூன்று பிரதேசங்களுக்கும் பொருத்தமான இடத்திலேயே பொருளாதார மத்திய நிலையம் அமைக்கப் பட்டுள்ளது எனவும் இடத்தெரிவு பொருத்தமானது எனவும் கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்டது. அத்துடன் வர்த்தகர்கள் குறிப்பிட்ட காலத்தினுள் தமது செயற்பாடுகளை ஆரம்பிக்காவிடின் அவற்றை மீளப்பெற்று வேறு வர்த்தகர்களுக்கு வழங்கவேண்டும் எனவும் கருத்துத் தெரிவிக்கப்பட்டது.


பொருளாதார மத்திய நிலையத்தை மீள ஆரம்பிப்பதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து அடுத்த மாத இறுதிக்குள் அதனை ஆரம்பிப்பது என்றும், அதனை செயற்பாட்டு நிலைமைக்கு கொண்டு வந்த பின்னர் அடுத்தடுத்த கட்டங்கள் தொடர்பில் ஆராயலாம் எனவும் அமைச்சர் வசந்த சமரசிங்க குறிப்பிட்டார்.

இந்தக் கலந்துரையாடலில், வர்த்தக வாணிப, உணவுப் பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர் க.இளங்குமரன், யாழ். மாவட்டச் செயலர், அமைச்சின் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.





மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



# ஈழத்துத் திருக்கோயில்கள் (வரலாறும் மரபும்)

வரலாறும் மரபும் 1159

## ஸ்ரீ கிருஷ்ணன் கோவில் திருகோணமலை

*" கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெய்*
*உண்டவாயன்என் உள்ளம் கவர்ந்தானை*
*அண்டர் கோனணி அரங்கன் என் அமுதினைக்*
*கண்ட கண்கள்மற் றொன்றினைக் காணாவே. "*

ஸ்ரீகிருஷ்ணர் கோவிலுக்கு தமிழ் மக்களோடு சிங்கள மக்களும் சென்று வணங்குவர். சிங்கள பௌத்த மக்கள், புத்தபிரான், திருமாலை இலங்கையின் காவல் தெய்வமாக வைத்துள்ளார் என நம்புகின்றனர். இலங்கை முடிவடையாத யுத்தபூமியாக விளங்குவதற்கு, திருமாலோடு தொடர்புடைய ஒரு கதை கூறப்பட்டு வருகின்றது. ஆழ்வார்களுடைய பாசுரங்களிலே இலங்கையைப்பற்றிய குறிப்புக்கள் காணப்படுகின்றன.

*" குடதிசை முடியைவைத்து குணதிசை பாதம்நீட்டி*
*வடதிசை பின்பு காட்டி தென்திசை இலங்கை நோக்கி*
*கடல்நிறக் கடவுள் எந்தை யரவணைத் துயிலு மாகண்டு*
*உடலெனக் குருகுமாலோ என்செய்கே னுலகத்தீரே. "*

"தென்திசை இலங்கை நோக்கி .." என்று பாடுவதற்கான காரணத்தைப் பலர் அறியமாட்டார்கள். இக்கதை இராமாயணத்தோடு தொடர்புடையதாகக் காணப்படுகின்றது.

வைணவக் கோவில்களிலே அருளாட்சி நிறைந்த கோவிலாகத் திருவரங்கம் விளங்குகின்றது. சைவர்களுக்குரிய சிறந்த திருத்தலமாகச் சிதம்பரம் விளங்குவதுபோல, திருவரங்கம் வைணவர்களுக்குரிய முக்கிய தலமாக விளங்குகின்றது. திருவரங்கத்தை, பெரிய கோயில், பூலோகவைகுண்டம் எனப் பலவாறாக அழைக்கும் மரபு காணப்படுகின்றது. தொண்டரடிப்பொடியாழ்வார் திருவரங்கத் தொண்டில் தம்மை முழுமையாக அர்ப்பணித்தவர். ஒரு சந்தர்ப்பத்தில் அவர், "...இச்சுவை தவிர யான் பொய் இந்திரலோகம் ஆளும் அச்சுவை பெறினும் வேண்டேன்..." எனத் திருவரங்கத் தொண்டைப்பற்றிப் பாடியுள்ளமை, திருவரங்கத்தின் சிறப்பை எடுத்துக்காட்டுகின்றது.

திருவரங்கத்தில் திருமால் சயனக்கோலத்தில் இருப்பதைப்பாடும்போது, "தென்திசை இலங்கைநோக்கி..." என்ற வரிகள் சிந்தனையைத் தூண்டுவதாகக் காணப்படுகின்றது. புராணக் கதைகள், பக்தர்களின் நம்பிக்கைகள் என்பன இவ் வரிகளிடையே இழையோடுகின்றது.

இலங்கையில் எழுந்தருளியிருக்கவேண்டிய திருமாலே, திருவரங்கத்திலே எழுந்தருளியிருக்கும் இறைவன் என்ற ஐதீகம் மக்களிடையே நிலைத்துள்ளது. அரங்கநாதன் பிரம்மதேவனால் பூசிக்கப்பட்ட மூர்த்தியென்றும், இஷ்வாகு என்பவனின் தவத்திற்கிரங்கிய பிரம்மா, அரங்கநாதரை இஷ்வாகுவிற்குக் கொடுத்தார். இஷ்வாகுமுதல் இராமபிரான்வரை இம்மூர்த்தியைப் பூசித்து வந்துள்ளனர்.

இராம இராவண யுத்தம் முடிந்து அயோத்தியிலே இராமருக்குப் பட்டாபிஷேகம் நடைபெற்றது. அந்த விழாவிலே இராவணனின் சகோதரனாகிய விபீஷணன் பங்கேற்றுள்ளான். அவ்வேளையிலே இராமர், பிரம்மதேவன் இஷ்வாகுவிற்கு அளித்த அரங்கநாதரை விபீஷணனுக்கு அன்பளிப்பாக அளித்துள்ளார். பட்டாபிஷேகம் நிறைவுபெற்று இலங்கை திரும்பிய விபீஷணன் தன்னுடன் அரங்கநாதர் சிலையையும் கொண்டு சென்றான். அச்சிலையைத் திருச்சிவரை கொண்டு வந்த விபீடணனால் அங்கிருந்து இலங்கைக்குக் கொண்டு செல்ல முடியவில்லை. காவிரியாற்றங்கரையிலேயே அச்சிலை நிலைகொண்டுவிட்டது. அரங்கநாதர்சிலை இலங்கைக்குக் கொண்டுசெல்லச் சந்தர்ப்பம் இல்லாமல்போன காலந்தொட்டு, இலங்கை யுத்தபூமியாகக் காணப்படுவதான ஒரு ஐதீகம் தமிழ், சிங்கள மக்களிடையே நிலவுகின்றது.

மனிதநேயத்தையும், சமாதானத்தையும் மறந்து, ஐதீகத்தில் நம்பிக்கைகொண்ட முன்னைநாள் ஜனாதிபதி திருமதி. சந்திரிகா அம்மையார் அவர்கள், சென்னையிலுள்ள பெரியவர் கணபதி ஸ்தபதியிடம், சயனநிலையிலுள்ள அரங்கநாதர் சிலையை உருவாக்கித்தருமாறு கோரியுள்ளார். அத்தோடு ஸ்ரீரங்கம் கோவிலைப்போன்று இலங்கையில் அமைக்க, 25 ஏக்கர் நிலமும் ஒதுக்கப்பட்டது. விபீ'ணன் கொண்டுவந்ததாகக் கருதப்படும் அரங்கநாதரைவிட மூன்று அடி அதிக நீளமுள்ள 16 அடிகொண்ட சயனநிலையிலுள்ள அரங்கநாதரை கணபதி ஸ்தபதி அவர்கள் உருவாக்கியுள்ளார்கள். கோவில் அமைப்பதற்குரிய கோபுர சிற்பங்கள், பிரகாரசந்நிதிகள் யாவும் இவரால் பூர்த்தி செய்யப்பட்டவேளையில், இலங்கையில் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டது. இக்காரணத்தினால் சந்திரிகா அம்மையார் மேற்கொண்ட அரங்கநாதர் கோவில் நிறுவும் முயற்சி தடைப்பட்டது. இலங்கையில் நிறுவப்படவிருந்த மூலவருக்குக் கண்திறக்க முடியாத நிலையில், அரங்கநாதர் இவரிடமே இருப்பதாக இவர் தெரிவித்துள்ளார். பிரதி'டை செய்யும்பொழுதே கண்திறப்பது மரபு.

இலங்கை தொடர்ந்தும் யுத்தபூமியாகத் திகழ்வதைக் கண்ணுற்ற கணபதி ஸ்தபதி அவர்கள், அரங்கநாதர் ஆலயத்தை இலங்கையில் நிறுவுவதன்மூலம், யுத்தம் மறைந்து சமாதானபூமியாக இலங்கை விளங்கும் என்ற கருத்துடையவராகக் காணப்படுகின்றார். புத்தன்காட்டியஅன்புவழிகளை மறந்து, அனைத்து சமாதான முயற்சிகளையும் முடக்கியுள்ள அரசும், இந்துசமய அறநிலைத்துறையும் அக்கறைகொண்டால், இலங்கை சமாதானபூமியாக மலரும் என்பதில் ஆன்மீகவாதிகள் தொடர்ந்தும் நம்பிக்கை கொண்டவர்களாகக் காணப்படுகின்றனர்.

தொடரும்...




## வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான குத்துச் சண்டைப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி வென்ற இரண்டு தங்களும் இரண்டு வெண்கலப் பதக்கங்களும்




வடக்கு மாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட குத்துச் சண்டைப் போட்டி 11ம் திகதிங்கட்கிழமை முல்லைத்தீவு வித்தியானந்தாக் கல்லூரியில் நடைபெற்றது.

இக் குத்துச் சண்டைப் போட்டியில் சென் பற்றிக்ஸ் கல்லூரி மாணவர்களான 16 வயது (44-46 Kg) எடைப்பிரிவில் ரு.சுலக்சன் முதலாம் இடத்தினைப் பெற்று தங்கப் பதக்கத்தினையும், 20 வயது (46-49Kg) எடைப்பிரிவில் ரா.விசாலகன் முதலாம் இடத்தினைப் பெற்று தங்கப் பதக்கத்தினையும், அதேபிரிவில் உ.அனைக்ஸ் மூன்றாம் இடத்தினைப் பெற்று வெண்கலப் பதக்கத்தினையும், அதே 20 வயது (56-60 Kg) எடைப்பிரிவில் சு.றொசினோ மூன்றாம் இடத்தினைப் பெற்று வெண்கலப் பதக்கத்தினையும் பெற்றுக் கொண்டனர்.


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

இலங்கை செய்திகள்
Sri Lanka News

மன்னார் நிருபர்

# மன்னார் தீவில் முன்னெடுக்கப்படுகின்ற காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வு ஆகியன தொடருமானால் பிரதேசத்தினுடைய வாழ்வியல் சூழல் பாதிக்கப்படும்



- எஸ்.ஆர்.லெம்பேட் (14-08-2025)

மன்னாரில் மக்களின் வாழ்வியலை பாதிக்கும் காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வு போன்றவற்றிற்கு எதிராக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற போராட்டத்திற்கு இலங்கை தமிழரசு கட்சி பூரண ஆதரவை வழங்கும் என அக்கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் மக்களின் எதிர்ப்பை மீறி முன்னெடுக்கப்பட்டு வரும் காற்றாலை மின் கோபுரம் அமைக்கும் நடவடிக்கை மற்றும் கனிய மணல் அகழ்வு போன்றவற்றிக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில் தொடர்ச்சியாக மன்னார் பஜார் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் வியாழக்கிழமை (14) காலை 12 வது நாளாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற மக்களின் எழுச்சி போராட்டத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், மன்னார் தீவில் இயற்கைச் சூழலில் வாழ்கின்ற மக்களின் வாழ்வியலை பாதிக்கின்ற வகையில் முன்னெடுக்கப்படுகின்ற காற்றாலை மின் உற்பத்தி, கனிய மணல் அகழ்வு ஆகியவை தொடருமானால் மன்னார் பிரதேசத்தினுடைய வாழ்வியல் சூழல் மிகவும் பாதிக்கப்படும் என்பதை வெளிப்படுத்தி இப்போராட்டம் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போது இடம்பெற்று வருகின்ற போராட்டம் அமைதியான முறையில் ஜனநாயக ரீதியில் இடம்பெற்று வருகின்றது. இப்போராட்டம் வெற்றியளிக்க வேண்டும்.

இப்போராட்டம் குறித்து ஜனாதிபதியின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

மீளாய்வின் அடிப்படையில் மக்களின் கோரிக்கைகள் முழுமையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, இயற்கையுடன் கூடிய மன்னார் அழிவிலிருந்து பாதுகாக்க அரசாங்கம் உரிய சூழலை ஏற்படுத்தி கொடுக்கும் என்பதை நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அந்த வகையிலே மக்களினுடைய போராட்டம் வெற்றி அளிக்க வேண்டும் என்பதை இலங்கை தமிழரசுக்கட்சியின் தலைவர் என்கின்ற வகையில் எனது ஆதரவையும், இலங்கை தமிழரசுக்கட்சியின் முழுமையான ஆதரவையும் இப்போராட்டத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன்.என அவர் மேலும் தெரிவித்தார்.

மன்னாரில் குறித்த போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்ற நிலையில் புதன்கிழமை (13) மாலை ஜனாதிபதியுடன் இடம்பெற்ற கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்ட இறுதி முடிவுகள் தொடர்பாக உரிய அதிகாரிகள் போராட்டக்காரர்களுக்கு அறிவிக்கப்படாத நிலையில் குறித்த போராட்டம் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இடம்பெற்ற குறித்த 12வது நாள் போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கலந்து கொண்டிருந்தார்.





மேலும் இலங்கை தமிழரசு கட்சி சார்பாக வருகை தந்த வடமாகாண சபையின் அவைத்தலைவர் சி.வி.கே.சிவஞானம் அவரது தமிழரசுக் கட்சியின் பதவி நிலை குறித்து இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை தலைவர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் இடம் வினவிய போது சி.வி.கே.சிவஞானம் இலங்கை தமிழரசுக் கட்சியில் என்ன பதவியில் இருக்கின்றார் என்பது தனக்கு தெரியாது என பதில் வழங்கியது குறிப்பிடத்தக்கது.








ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது!
என்ற உறுதியோடு உங்கள் ‘ராஜயோகம்’
“ஜோதிட மகரிஷி”
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068
9940431377

# இவ்வார ராசிபலன்

**15-08-2025 வெள்ளி தொடக்கம் 21-08-2025 வியாழன் வரையும்**




**மேஷம்:** கௌரவம் கூடும் வாரம். முன்னோர்கள் ஆசீர்வாதம் கிடைக்கும். நீண்ட நாள் முயற்சி நிறைவேறும். வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வாகனத்தால் செலவு ஏற்படும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். வாகனத்தில் செலவு ஏற்படும். குடும்பச் சுமைகள் கூடும். பெற்றோர் நலனில் அக்கறை தேவை. நட்பு வட்டம் விரிவடையும். ஆபரணப் பொருள் களவு போகும். அனுகூலச் செய்தி வந்து சேரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். மாற்று மருத்துவம் பலன் தரும். உடல் நலம் சீராகும். கணவன், மனைவி அன்யோன்யம் அதிகரிக்கும். ஊதிய உயர்வு கிடைக்கும். கடன் தொல்லை தீரும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மனைவியின் அன்பு அதிகரிக்கும். திருப்பு முனை ஏற்படும். எதிர்பார்த்த உதவியால் ஏற்றம் உண்டு. குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. விரோதங்கள் விலகும். பாகப்பிரிவினை சுமூகமாகும். கூடுதல் லாபம் குதூகலம் தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். தாய்வழி ஆதரவு பெருகும். பிள்ளையால் பெருமை சேரும். சச்சரவுகள் அகலும். ஆசிரியர்களுக்கு அற்புதமான காலம். வெற்றியும், வெகுமதியும் கூடும். சமுதாய விழிப்புணர்ச்சியோடு செயல்படுவது நல்லது. உற்சாகம் மேலோங்கும். பொல்லாதவர்கள் தொல்லை ஒழியும். எடுத்த முயற்சி வெற்றி பெறும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். வழக்குகள் சாதகமாகும். காதலர்களுக்குள் கசப்பு நீங்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஆதித்ய பகவான், அதிர்ஷ்ட எண்: 9,8,5,4
அதிர்ஷ்ட நிறம்: காவி நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,K




**ரிஷபம்:** அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலைமோதும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். சொத்துக்களில் வில்லங்கம் விலகும். எண்ணங்கள் பலிதமாகும். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். கனிவான பேச்சு ஆறுதல் தரும். கலைகளில் ஆர்வம் கூடும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். பேச்சில் நிதானம் தேவை. மறைமுக எதிர்ப்பு உருவாகும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். தாராளமான தனவரவு உண்டு. காரிய வெற்றி கிடைக்கும். மதிநுட்பம் மாபெரும் வெற்றியைத் தரும். விறுவிறுப்பான காலம். இடமாற்றத்தால் இனிய தகவல் உண்டு. மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்குப் பெறுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். புதிய பொருள் சேர்க்கையுண்டு. சூழ்நிலைகள் சாதகமாகும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் கூடும். உத்தியோக உயர்வு தாமதமாகும். செல்வாக்கு பெருகும். வாயில் தேடி வரன் வரும். ஆசைகள் நிறைவேறும். மங்கள நிகழ்ச்சி நடைபெறும். பிரச்சனைகள் அகலும். செயல்பாட்டில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். வரவு திருப்தி தரும். விலகிச் சென்றவர் விரும்பி வருவர். பூர்வீகச் சொத்துக்கள் விற்பனையாகும். புண்ணியக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய் பாசம் அதிகரிக்கும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: உச்சிகாளியம்மன், அதிர்ஷ்ட எண்: 7,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,V




**மிதுனம்:** சுபிட்ஷங்கள் பெருகும் வாரம். காரியம் கைக்கூடும். புதிய முயற்சிகளை தள்ளிப்போடவும். மாணவர்களுக்கு படிப்பில் அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். உறவினரால் உதவிகள் கிட்டும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். பெண்களுக்கு அணிகலன் சேரும். தொலைதூரப் பயணம் ஏற்படும். பணியாளர்களின் ஒத்துழைப்பு கூடும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் பாராட்டு கிட்டும். வார்த்தையில் நிதானம் தேவை. தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். பருப்பு தானம் பாவம் போக்கும். பொன்னான காலமாக அமையும். தாய்வழி உறவில் நன்மை உண்டாகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். கலை ஆர்வம் கூடும். தனவரவில் மேன்மை உண்டு. நிதி நிலைமை சீராகும். பணப்பற்றாக்குறை நீங்கும். பிரச்சனைகள் குறையும். கணவன், மனைவி கருத்து வேறுபாடு அகலும். இனிப்பான செய்தி வரும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். குழந்தைகளால் அல்லல் ஏற்படும். உண்மைகள் வெளிப்படும். தன்னம்பிக்கை அதிகமாகும். தொழில் வழி தொல்லை குறையும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். வாகன அபிவிருத்தி உண்டு. ஆரோக்கியம் சீராகும். பக்குவமான பேச்சு அவசியம். பதவி உயர்வு ஏற்படும். நல்லோர் நட்பு கிட்டும். இயந்திர தொழிலில் லாபம் உண்டு. வழக்குகளால் தொல்லை உண்டு. இனிய எண்ணம் உருவாகும். வாழ்க்கை வசதி பெருகும். அந்தஸ்து அதிகமாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: குபேர பகவான், அதிர்ஷ்ட எண்: 1,4,3,5
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,E




**கடகம்:** பொருள் வரவு திருப்தி தரும் வாரம். பெருமைகள் கூடும். காதலில் மோதல் உண்டு. ஆதலால் கவனம் தேவை. உணவு பிரியம் அதிகரிக்கும். பாராட்டுப் பெருகும். புதிய தொழில் அமையும். உத்தியோகத்தில் உயர்வு ஏற்படும். வீண் விரயம் அதிகமாகும். பெருமைகள் சேரும். அரசியலில் புகழ் கூடும். வீண் பழி அகலும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தடைகள் விலகும். கலைத்தொழில் திருப்பம் தரும். கல்வியில் மந்த நிலை காணப்படும். பணியாட்களால் தொல்லை ஏற்படும். வாகன செலவு உண்டு. வருமானத் தடை உண்டு. புதிய வாய்ப்புத் தேடி வரும். பழைய நண்பர் சந்திப்பு கிட்டும். இனிய காதல் உருவாகும். எளிமையை விரும்புவீர்கள். எதிர்பார்ப்புகள் குறையும். இன்னல்கள் அகலும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொல்லைகள் குறையும். அரசு வழி ஆதாயம் உண்டு. உணவு விடுதி லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பொருளாதாரம் சிறப்பு தரும். புகழ்ச்சி அதிகரிக்கும். உஷ்ணம் அதிகரிக்கும். காரியம் இழுபறியாகும். பழிச்சொல் தேடி வரும். முயற்சி பலன் தரும். நண்பர்கள் கவனம் தேவை. உலோகத்தொழில் உயர்வு தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். முடிவுகள் சாதகமாகும். நிர்வாகச் செலவுகள், வாய்ப்புகள் வந்து சேரும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். பொதுப் பிரச்சனைகள் விலகும். உடல் உ'ணம் வந்துபோகும். அச்சுத்தொழில் ஆதாயம் தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: காளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 7,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: சில்வர் கிரே (வெள்ளி), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,R




**சிம்மம்:** புதிய வாய்ப்புக்கள் தேடி வரும் வாரம். தன வரவில் தடங்கல் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். பொருளாதாரம் மேன்மை தரும். குடும்பத்தில் அமைதி பெருகும். சந்தர்ப்ப சாதகம் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். வாழ்வில் வளம் உண்டு. விரும்பிய பொருள் சேரும். சுபகாரியம் கைகூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இலக்கிய ஆர்வம் கூடும். காதலர்களுக்கு மனக்கசப்பு ஏற்படும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். அரசியல் ஆதாயம் தரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தடைகள் விலகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். வறுமைகள் அகலும். விளையாட்டுத்துறையில் வெகுமானம் கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். உழைப்பில் கவனம் தேவை. மங்களச்செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் தேவை. முகப்பொலிவு கூடும். இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழைய கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். பொது வி'யங்களில் நாட்டம் ஏற்படும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: திதி தேவதை, அதிர்ஷ்ட எண்: 7,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T





**கன்னி:** எதிரிகள் உதிரியாகும் வாரம். புரியா சந்தோஷம் குடிக்கொள்ளும் ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். மதிப்பும், மரியாதையும் உயரும். உடன் பிறப்புக்கள் உதவி கிடைக்கும். பணவரவு திருப்தி தரும். பொதுவாழ்வில் புகழ் கூடும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். வாழ்த்துச் செய்திகள் வரும். அரசு துறையில் ஆதாயம் உண்டு. தர்ம சிந்தனை மேலோங்கும். கல்வியில் ஆர்வம் கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். சுமூகமான சூழ்நிலை பெருகும். தேக பலம் கூடும். வேண்டாத விஷயங்கள் விலகும். உடல் நலம் சீராகும். புதிய கடன் வாங்க நேரிடும். மனக்குழப்பங்கள் தீரும். தொட்ட காரியம் ஜெயமாகும். செயல்பாட்டில் தீவிரம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிடைக்கும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. நியாயம் ஜெயிக்கப் போராடுவீர்கள். இடமாற்றத்தால் நன்மை உண்டு. தந்தை உடல் நலனில் கவனம் தேவை. சொந்த பந்தங்களால் உதவி உண்டு. சேமிப்பு வளரும். தொழிலாளர்களுக்கு மனநிறைவு உண்டு. மாணவர்களுக்கு சாதகமான காலம். கலைஞர்களுக்கு புகழ் கூடும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். வியாபாரம் வெற்றி தரும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: அம்பிக்கை, அதிர்ஷ்ட எண்: 1,9,5,3
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,M




**துலாம்:** சாதனை படைக்கும் வாரம். அரசியல்வாதிகளுக்கு அற்புதமான காலம். கலைஞர்களுக்கு ஆதாயம் பெருகும். வழக்குகள் சாதகமாகும். வரவுகள் பெருகும். அன்னிய தேச பயணம் உண்டு. காதலர் ஒற்றுமை அதிகரிக்கும். கடன் வசூலாகும். கல்வியில் மேன்மை உண்டு. சிக்கனம் தேவை. விரக்திகள் மறையும். வீடு, மனை யோகம் உண்டு. வியாபாரத்தில் கவனம் தேவை. புத்துணர்ச்சியோடு செயல்படுவீர். புத்தி சாதுர்யம் பெருகும். நட்பு வட்டம் விரிவடையும். மனதில் மகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுபகாரியங்கள் நடந்தேறும். திட்டமிட்ட காரியங்கள் வெற்றி முகமாகும். உடல் ஆரோக்கியம் சீராகும். செய்த்தொழில் லாபம் தரும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். முற்போக்கு சிந்தனைகள் உருவாகும். மெத்தனப் போக்கு விலகும். பயணம் அனுகூலம் தரும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். விருந்தினர் வருகை உண்டு. நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மனோதைரியம் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். பிள்ளை வழிச் செலவுகள் அதிகரிக்கும். உடல்நலம் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலை விலகும். பாராட்டுக்கள் கூடும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். திருமண வாய்ப்பு தேடி வரும். திடீர் லாபம் உண்டு. மனக்குழப்பம் நீங்கும். மற்றவர் உதவி கிட்டும். வெளியூர் பயணம் உண்டு. திட்டங்கள் நிறைவேறும். மருத்துவச் செலவுகள் குறையும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். திருப்பு முனை ஏற்படும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 4,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,G




**விருச்சிகம்:** தன்னம்பிக்கை அதிகரிக்கும் வாரம். தங்க நகைகள் சேரும். கோரிக்கைகள் நிறைவேறும். பெரியோர்களின் பாராட்டு கிட்டும். வியாபாரம் விருத்தியாகும். மேலதிகாரியின் பாராட்டு உண்டு. கூட்டுத்தொழில் கவனம் தேவை. தொலைதூரப் பயணம் ஏற்படும். பெண்களுக்கு அணிகலன் சேரும். யோக பலம் கூடும். எண்ணங்கள் வண்ணமயமாகும். பொறுப்புக்கள் கூடும். உறவினரால் உதவிகள் கிட்டும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். வருமானம் திருப்தி தரும். மாற்று யோசனை பயன் தரும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. புதிய முயற்சிகள் தள்ளிப்போடவும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும்.

(தொடர்ச்சி 22 பக்கம்)

# கவிஞர் கண்ணதாசனின் 'கவிஞன் நான் ஒரு காலக்கணிதம்' ஓர் மெய்யியல் நோக்கு



கே. ஆனந்தநாதன் - கனடா

கவியரசு கண்ணதாசன் “கவிஞன் நான் ஓர் காலக்கணிதம்” என்னும் அவரது தனிப்பாடல்மூலம் தனது வாழ்வைக் கூறுகின்றார். ஓர் அழகியல் மெய்யியல் நோக்கு.

அண்மையில் ஜூன் 24, 2025 இல் தமிழ்கூறும் நல்லுலகம் எங்கும் கவியரசு கண்ணதாசனின் 98வது பிறந்தநாளைக் கொண்டாடிவருகிறது. இத்தனிக்கவிதை அவரது வாழ்வைப் படம்பிடித்துக் காட்டுகிறது. அதாவது “தான்” எப்படிப்பட்டவர் என்பதை இத்தனிக்கவிதையில் தெளிவுபடுத்துகிறார். அதுபற்றிய தெளிவான தரிசனத்தைப் பெறுவதே இக்கட்டுரையின் நோக்காகும். கவிதையை முதலில் முழுமையாகப் பார்த்து பின்பு வரிக்குவரி அவர்தரும் விளக்கத்தை விபரமாகப் பார்ப்போம். இக்கட்டுரை அழகியல் மெய்யியல் நோக்கில் அவரது கவிதையைப் பார்க்க முயல்கின்றது.

“கவிஞன் யான் ஓர் காலக்கணிதம்”

கவிஞன் யானோர் காலக் கணிதம்
கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்
இவை சரி யென்றால் இயம்புவ தென்தொழில்
இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை
ஆக்கல் அளித்தல் அழித்தலிம் மூன்றும்
அவனும் நானுமே அறிந்தவை அறிக
செல்வர்தன் கையிற் சிறைப்பட மாட்டேன்
பதவிவா ளுக்கும் பயப்பட மாட்டேன்
பாசம் மிகுத்தேன் பற்றுதல் மிகுத்தேன்
ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்
உண்டா யின்பிறர் உண்ணத் தருவேன்
இல்லா யினெமர் இல்லந் தட்டுவேன்
வண்டா யெழுந்து மலர்களில் அமர்வேன்
வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந் தருவேன்
பண்டோர் கம்பன் பாரதி தாசன்
சொல்லா தனசில சொல்லிட முனைவேன்
புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக் காது
இகழ்ந்தால் என்மனம் இறந்து விடாது
வளமார் கவிகள் வாக்குமூ லங்கள்
இறந்த பின்னாலே எழுதுங்கள் தீர்ப்பு
கல்லாய் மரமாய்க் காடுமே டாக
மாறா திருக்கயான் வனவிலங் கல்லன்
மாற்றம் எனது மானிட தத்துவம்
மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்
எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை
என்ப தறிந்தே ஏகுமென் சாலை
தலைவர் மாறுவர் தர்பார் மாறும்
தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்
கொள்வோர் கொள்க குரைப்போர் குரைக்க
உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது
நானே தொடக்கம் நானே முடிவு
நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்.

- கவிஞர் கண்ணதாசன்

இவ்விரண்டு கவியரசின் தனிக் கவிதைகளும் அவரது “நான் பார்ப்பதெல்லாம் அழகின் சிரிப்பு” என்னும் அழகியல் தத்துவத்தோடு தொடர்புடையவை. அதாவது அனுபவம் என்றாலென்னும் கவிதையும் கவியரசு கண்ணதாசன் தனது வாழ்வியல் அனுபவத்தைத்தான் கவிதைகளாகத் தந்தவர்.

கவியரசு கண்ணதாசன் அனுபவம் என்றால் என்ன என்பதற்கான பதில்:

“பிறப்பில் வருவது யாதெனக் கேட்டேன்
பிறந்துபாரென இறைவன் பணித்தான்!
படிப்பெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
படித்துப்பாரென இறைவன் பணித்தான்!
அறிவெனச் சொல்வது யாதெனக் கேட்டேன்
அறிந்தபாரென இறைவன் பணித்தான்
அன்பெனப்படுவது என்னவெனக் கேட்டேன்
அளித்துப்பாரென இறைவன் பணித்தான்!
பாசம் என்பது யாதெனக் கேட்டேன்
பகிர்ந்துபாரென இறைவன் பணித்தான்!
மனையாள் சுகமெனில் யாதெனக் கேட்டேன்
மணந்துபாரென இறைவன் பணித்தான்!
பிள்ளை என்பது யாதெனக் கேட்டேன்
பெற்றுப்பாரென இறைவன் பணித்தான்!
முதுமை என்பது யாதெனக் கேட்டேன்
முதிர்ந்துபாரென இறைவன் பணித்தான்!
வறுமை என்பது யாதெனக் கேட்டேன்
வாடிப்பாடிரென இறைவன் பணித்தான்!
இறப்பின் பின்னது ஏதெனக் கேட்டேன்
இறந்துபாரென இறைவன் பணித்தான்!
அனுபவித்தேதான் அறிவது வாழ்க்கையெனில்
ஆண்டவன் நீ ஏன் எனக் கேட்டேன்!
ஆண்டவன் சற்றே நெருங்கிவந்து
அனுபவம் என்பதே நான்தான் என்றான்!”

கவியரசு கண்ணதாசனின் தனிக்கவிதைகள் - மேலே குறிப்பிட்ட கவிதைகளின் விளக்கத்தைப் பின்வரும்பத்திகளில் பார்ப்போம்.

விளக்கம்.˙.சாராம்சம்

“கவிஞன் யானோர் காலக்கணிதம்”
கருப்படுபொருளை உருப்பட வைப்பேன்!
புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்
பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!
இவை சரியென்றால் இயம்புவதென் தொழில்
இவை தவறாயின் எதிர்ப்பதென் வேலை!
ஆக்கல் அளித்தல் அழித்தல் இம்மூன்றும்

அவனும் யானுமே அறிந்தவை அறிக!

“கவிஞர் யானோர் காலக்கணிதம்” என்றாலென்ன என்றால் கடந்த காலத்தையும் நிகழ்காலத்தையும் அறிந்திருப்பதால் காலத்தைக் கணித்துச் சொல்லக்கூடிய ஒரு காலக்கணிதம். இவர்களைத்தான் காலக்கணிதர்கள் என்று அழைப்பர். இத்தொழில் அல்லது இக்குலத்தில் பிறந்தவர்களைத்தான் கணியன் என்று அழைப்பர். கவிஞனாக இருப்பதாலேயே “நான் ஓர் காலக் கணிதம்” என்கிறார் கவியரசு கண்ணதாசன்.

கருப்பொருளை உருப்பட வைப்பேன் - என்மனதில் கருப்பொருளாகத் தோன்றிய கருத்துகளை (எண்ணக் கருத்துகளை) உருப்பொருளாக, கவிதைகளாக அல்லது பாடல்களாக கதையாக கட்டுரையாக இலக்கியமாக மாற்றித் தருபவன்.

“புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்”. புகழ்பெற்றிருப்பதனாலேயே பூமியில் இருக்கின்ற பல தெய்வங்களைப்போல நானும் ஒரு தெய்வம்.

“பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்! இவை சரியென்றால் இயம்புவதென் தொழில்” - இவை சரிஎன்று என்மனதில் தோன்றியவற்றைக் கவிகளில் எடுத்தியம்புவது என் தொழில். இவை தவறு என்று மனதிற்குத் தோன்றியவற்றை எதிர்ப்பதும் என்வேலை.

“ஆக்கல், அளித்தல், அழித்தல் இம்மூன்றும் (இறைவனும் நானும்) அவனும் யானுமே அறிந்தவை” - ஆக்கல் - படைத்தல் அளித்தல் - கொடுத்தல்.˙.காத்தல். அழித்தல் - நீக்குதல்/ஒடுக்குதல். இறைவனுக்கும் எனக்கும்தான் இம்மூன்றும் தெரியுமென்கிறார். இம்மூன்றையும் தான் நானும் அவனும் (இறைவனும்) செய்கின்றோம். அதாவது இலக்கியங்களைப் படைக்கிறேன். படைத்தவற்றை மக்கள் இன்புறக் கொடுக்கிறேன். தீய கருத்துகளை ஒடுக்குகிறேன்.

“செல்வர்கள் கையில் சிறைப்பட மாட்டேன்!” பதவிவாளுக்கும் பயப்படமாட்டேன்! பாசம் மிகுத்தேன்! பற்றுதல் மிகுத்தேன்! ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்! உண்டாயின் பிறர் உண்ணத் தருவேன்! இல்லாயின் (எமர்) நண்பர்கள் இல்லம் தட்டுவேன். வண்டாயெழுந்து மலர்களில் அமர்வேன்! வாய்ப்புறத்தேனை ஊர்புறத் தருவேன்! “செல்வர் தங்கையில் சிறைப்பட மாட்டேன்.” (இதன் அர்த்தம்) செல்வந்தர்களின் செல்வத்துக்கு மயங்கி அவர்களிடம் சிறைப்பட்டு அவர்களைப் புகழ்ந்து உரைக்கமாட்டேன் என்பதாகும்.

பதவி வாளுக்கும் பயப்பட மாட்டேன் பதவியாகிய வாளுக்கும் (அதிகாரத்திற்கும்) பயப்படமாட்டேன்.

“பாசம் மிகுத்தேன்” - “பற்றுதல் மிகுத்தேன்!” - பாசம் மிகுதியாகக் கொண்டவன் நான் (3 மனைவிகள் 15 பிள்ளைகள்) கவியரசிற்கு உண்டு. அத்தனைபேர்மேலும் பாசம் மிகுதியாகக் கொண்டவர் கவியரசு. பாசம் மிகுதியாகக் கொண்டவன் நான். பற்றுதலும் (ஆசையும்) மிகுதியாகக் கொண்டவன் நான்.

“ஆசை தருவன அனைத்தும் பற்றுவேன்!” - நான் ஆசைப்படுபவை எவையோ அல்லது ஆசையைத் தருவன (குறிப்பாகப் பெண்கள் மீது) எவையோ அவை அனைத்தையும் கைப்பற்றுவேன்!

“உண்டாயின் உண்ணத்தருவேன்” - என்னிடம் பொருள் உள்ளது எனில் பிறர்பசி அகற்ற உண்ணத் தருவேன். உண்மையில் கவியரசு எத்தனை பேர்களுக்கு உதவினாரென்பதை எண்ணிட முடியாதெனக் கூறுவர் (காந்தி கண்ணதாசன் மகன் கூறுவார்).

“இல்லையாயின் எமர் இல்லம் தட்டுவேன்” - என்னிடம் பொருள் இல்லையாயின் (எமர் - நண்பர்) எம் நண்பர் இல்லம் சென்று கேட்கத் தயங்கமாட்டேன். சொந்தக்காரர்களிடம் அல்ல - முக்தா சீனிவாசனிடம் பட்ட கசப்பான அனுபவம்).

“அண்ணன் என்னடா தம்பி என்னடா” - “பழநி” சினிமாப் பாட்டு மூலம் இக்கசப்பான அனுபவத்தை கவியரசு விளக்குவதை இவ்விடத்தில் குறிப்பிடல் வேண்டும். கவியரசின் சகோதரர் முக்தா சீனிவாசன்).

“வண்டாயெழுந்து மலர்களில் அமர்வேன்” - வண்டு மலர்களில் அமர்வதுபோல் பெண்களை நாடிச்சென்று சுவைப்பேன். இதனைப் பொறுத்தவரை மக்கள் மத்தியில் ஒரு தவறான புரிதல் உண்டு. அதனை விளக்குதல் - விளங்குதல் வேண்டும்.

“என்னைப் பின்பற்றாதீர்கள் - என் கவிதைகளைப் பின்பற்றுங்கள்” என்கிறார் கவியரசு. (“ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு” என்ற பாடலை இவ்விடத்தில் குறிப்பிடுதல் வேண்டும்.) என்னுடைய தத்துவப் பாடல்களை, அறக்கருத்துகளைப் பாருங்கள். பின்பற்றுங்கள் என்று கவியரசு கூறுகிறார்.

“வாய்ப்புறத் தேனை ஊர்ப்புறந்தருவேன்” - நான் அறிந்த இன்பங்களை, சுவைகளை, ஊர் அறியுமாறு இலக்கியங்களில் தருவேன்.

“பண்டோர் கம்பன், பாரதி, பாரதிதாசன் சொல்லாதன சில சொல்லிவிட முனைவேன்” - ஒழுக்கத்தை ஓம்பிய கம்பனும் விடுதலையைப் பாடிய மகாகவி பாரதியும் சமூகத்தைப் பாடிய பாரதிதாசனும் சொல்லாத சில கருத்துதகளை என் கவிதைகளில் சொல்ல முயல்வேன்.

“புகழ்ந்தால் என்னுடல் புல்லரிக்காது” “இகழ்ந்தால் என் மனம் இறந்துவிடாது! - வளமார் கவிகள் வாக்குமூலங்கள் இறந்த பின்னாலே எழுதுக தீர்ப்பு.” புகழ்ச்சிகளைக் கண்டு பெருமிதத்தால் என் உடல் புல்லரிக்காது. என்னை இகழ்ந்தால் அதற்காக என் மனம் சோர்ந்து இறந்துவிடாது. நான் சொல்கின்ற கருத்துகள் (கவிதைகள்) எல்லாமே என் வாக்குமூலங்கள். ஒரு குற்றவாளி தன் வாக்குமூலத்தால் எவ்வாறு தன்னுடைய குற்றங்களை ஒப்புக்கொள்கிறானோ அவ்வாறு தான் என்னுடைய குற்றங்களை அனுபவங்களை ஒப்புக்கொள்கிறேன் என்கிறார்.

“இறந்த பின்னாலேயே எழுதுக தீர்ப்பு!” அவற்றைக் கொண்டு என் இறப்பின் பின்னால் நல்லவனா? தீயவனா? சான்றோனா? கயவனா? என்பது குறித்துத் தீர்ப்பு எழுதிக்கொள்ளுங்கள்.

“கல்லாய் மரமாய் காடுமேடாக மாறாதிருக்க யான் வனவிலங்கல்லன்!” “மாற்றம் எனது மானிடத்தன்மை.” தத்துவம் மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்! - கல்லைப்போல, மரத்தைப்போல, காட்டைப்போல மலையைப் போல என்றும் மாறாது நிலையாய் இருக்க நான் வனவிலங்கு அல்லன். (மனித மனமென்பது ஆசையின் வழி ஒன்றைவிட்டு ஒன்று தாவித்திரியும் என்கிறார் கவிஞர். “மனிதமனம் ஒரு குரங்கு” என்னும் கவிஞரின் பாடலோடு ஒப்பிடுதல் வேண்டும். (குரங்குபோல மனிதமனம் அலையக்கூடியது என்கிறார்.) (தனது கட்சி மாறுதலை கவியரசு குறிப்பிட்டாரோ தெரியவில்லை.)

“மாற்றம் எனது மானுட தத்துவம்” “மாற்றம் ஏன்? ஒன்றைத் தவிர மற்ற அனைத்துமே மாறக்கூடியது என்பதே என்னுடைய வாழ்க்கைத் தத்துவம்” “மாறும் உலகின் மகத்துவம் அறிவேன்!” - மாற்றத்தால் உயிர்த்திருக்கின்ற இந்த உலகத்தின் மகத்துவம் அறிவேன்.”

“எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை என்பதறிந்து ஏகுமென்சாலை” எவை எவை தீமை, எவை எவை நன்மை என்பவற்றை அறிந்து ஒழுகுவது என் வாழ்க்கைப் பயணம்.

“தலைவர் மாறுவர் தர்பார் மாறும். தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்.” இவ்வுலகில் தலைவர்கள் மாறுவர், ஆட்சியும் (தர்பார்) அரசுகளும் மாறும் இயல்புடையவை என்கிறார். தத்துவம் மட்டுமே அட்சயபாத்திமாய் என்றும் வீற்றிருக்கும். (அட்சயபாத்திரமென்பது அள்ள அள்ளக் குறையாத அமுதத்தைக் கொடுக்கும் பாத்திரம் என்கிறார் கவியரசு - மணிமேகலை)

எனவே இவ்வுலகில் தலைவர்கள் மாறுவர், ஆட்சியும் மாறும் இயல்புடையது. என் தத்துவங்கள் மட்டுமே அட்சயபாத்திரமாய் என்றும் வீற்றிருக்கும் என்கிறார் கவியரசு. அரசியல் அறத் தத்துவங்கள் என்றும் எம்மை வழிப்படுத்த இருந்துகொண்டே இருக்கும் என்கிறார். கடைசியாக என்ன கூறுகிறாரென்றால் “கொள்வார் கொள்க - குரைப்போர் குரைக்க!” என் கருத்துக்களை ஏற்றுக்கொள்வோர் ஏற்றுக்கொள்க. (குரைப்போர் - தூற்றுதல்). என்னைக் குறைகூறுவோர் குறைகூறுக. சுருக்கமாக என்ன கவியரசு கூறுகிறார் என்றால் போற்றுவோர் போற்றுக - தூற்றுவோர் தூற்றுக - நான் துணிந்து என் கருத்துகளைக் கூறுவேன் என்கிறார்.

“உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது” - ஒருவேளை நீங்கள் என்னை இகழ்ந்தால் உங்களுடைய வாய் வார்த்தைகள் என் உடலைத் தொடாது.

“நானே தொடக்கம். நானே முடிவு - நானுரைப்பது தான் நாட்டின் சட்டம்”. என்னுடைய இலக்கியப் பயணத்தில் என் கவியரசில் நானே தொடக்கம், நானே முடிவு, நான் சொன்ன கருத்துகள்தான் நாட்டின் சட்டம். இப்பாடல் கவியரசு கண்ணதாசனின் வாழ்க்கையைக் கிட்டத்தட்ட சொல்வதையே நாம் கண்டோம்.

பாட்டாளிகளுக்காகவும் பஞ்சணையில் தூங்கும் காதலர்களுக்காகவும் கவிதை இயற்றியவர் கவியரசர். அர்த்தமுள்ள இந்துமதம், யேசு காவியம் எழுதிய மத சமத்துவவாதி. பதவிவரும்போது பணிவும் வரவேண்டும் கொள்கையைப் பாடியவர். கவியரசின் கருத்துகளை மதிப்போம். கவிதைகளை இரசிப்போம். அவரது தத்துவக்கருத்துக்களை பின்பற்ற முயல்வோம்.

மேலே நான் குறிப்பிட்ட கவியரசின் இரண்டு தனிப்பாடல்களும் அதாவது “கவிஞன் யானோர் காலக்கணிதம்” என்பதும் “அனுபவம்” என்றால் என்ன என்பதும் “ஒரு கோப்பையிலே என் குடியிருப்பு” என்னும் சினிமாப்பாடலும் கவியரசின் முழுவாழ்வையயுமே பிரதிபலிக்கும் பாடல்களாகும்.

(இக்கட்டுரை கவியரசின் 98வது பிறந்தநாள் சிறப்புக் கட்டுரையாகும்).

# இவ்வார ராசிபலன்

(20 பக்கம் தொடர்ச்சி)

**விருச்சிகம்:** பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். ஆனந்தம் குடிக்கொள்ளும். பாகப்பிரிவினை ஏற்படும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. கல்வியில் கவனம் தேவை. பறவைகளிடம் அன்பு அதிகரிக்கும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். கலவரமான சூழ்நிலை காணப்படும். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். வாழ்க்கையில் பிடிப்பு ஏற்படும். உடல்நலம் மேம்படும். கணினித்துறையில் ஊதிய உயர்வு உண்டு. சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். மங்கள நிகழ்ச்சிகளில் இருந்து பங்கு பெறுவீர்கள்.
வழிபட வேண்டிய தெய்வம்: சூரிய பகவான், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: T,P




**தனுசு:** கடன் சுமை குறையும். பெண்களுக்கு வேலைபளு அதிகரிக்கும். பயணங்களால் பணம் கரையும். வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பழைய பாக்கிகள் வசூலாகும். தொழில் அபிவிருத்தி அடையும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். பிணி நீங்கும். திருப்தி ஏற்படும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். வியாபாரம் வெற்றி தரும். முயற்சிகளில் தாமதம் ஏற்படும். சகோதரியினால் நன்மை உண்டு. ஊக்கம் அதிகரிக்கும். கல்வி ஆர்வம் கூடும். திருமண வாய்ப்பு கூடி வரும். குதூகலம் தாண்டவமாகும். பொன், பொருள் சேரும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். காதல் எண்ணம் ஏற்படும். வழக்குகளில் செலவு ஏற்படும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். பொன்னான தருணம். வளமான வாழ்வு அமையும். உலோகத் தொழில் லாபம் தரும். தாய் நலனில் கவனம் தேவை. நிதிப் பற்றாக்குறை நீங்கும். வியாபாரம் சிறக்கும். பிரார்த்தனையில் ஆர்வம் அதிகரிக்கும். உடன் பிறப்புக்களால் உதவி கிட்டும். மனிதநேயம் மிகுதியாகும். பொன்னான நேரங்களாக அமையும். கட்டிடத் தொழில் லாபம் தரும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். பதவி வாய்ப்பு வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பாத விநாயகர், அதிர்ஷ்ட எண்: 4,2,1,9
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,J




**மகரம்:** பொன், பொருள் சேரும் வாரம். மருத்துவச் செலவு உண்டு. மங்களச் செய்தி வரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். ஆடம்பர எண்ணம் மேலோங்கும். தேக ஆரோக்கியம் மிளிரும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். பிள்ளைகளால் பெருமை சேரும். தனவரவுகள் தடைப்படும். திடீர் செலவுகள் ஏற்படும். புதிய முயற்சியினை உடனே செயல்படுத்தவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவனமுடன் இருக்க வேண்டும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். அன்றாட நாட்கள் மன மகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். பங்குச்சந்தையில் லாபம் கிட்டும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் கூடும். மனோ தைரியம் கூடும். மனதில் இருந்த தேவையில்லா பயங்கள் நீங்கும். இறை விழிப்புணர்வு கூடும். மற்றவர்களிடத்தில் அன்பாக நடந்துக் கொள்வீர்கள். சமூக செயலில் ஈடுபடுவீர். புது தொழிலை ஆரம்பிக்க முன் வருவீர்கள். குதூகலம் தாண்டவமாகும். நன்மைகள் அதிகரிக்கும். மருத்துவச் செலவுகள் கூடும். மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். நட்பு பெருகும். வராத கடன் வந்து சேரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். தொழிலில் மந்த நிலை காணப்படும். சந்தோ'ம் அதிகமாகும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கந்தப்பெருமாள், அதிர்ஷ்ட எண்: 5,4,1,9
அதிர்ஷ்ட நிறம்: கிளிப்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**கும்பம்:** கலகலப்பான வாரம். வியாபாரம் விருத்தியாகும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். மனவேதனை குறையும். உடல் ஆரோக்கியம் குறையும். வசதிகள் கூடும். லாபம் திருப்தி தரும். உறவால் பண விரயம் ஏற்படும். பொருளாதாரம் உயரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். சுறுசுறுப்பு அதிகமாகும். நல்லவர் நட்பு கிட்டும். வசதிகள் கூடும். ஆடை, அணிகலன் சேரும். கடவுள் பிரார்த்தனை கைகொடுக்கும். நினைத்ததை சாதித்துக் காட்டுவீர்கள். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆரோக்கியம் சீராகும். விவேகமான பேச்சுக்களால் வீண் வம்பு அகலும். ஊக்கம் அதிகரிக்கும். உடன்பிறப்புக்களால் உதவி கிடைக்கும். ஒற்றுமை அதிகரிக்கும். தாய்ப்பாசம் அதிகரிக்கும். நீண்ட நாளைய பிரச்சனை முடிவுக்கு வரும். முகப்பொலிவு கூடும். நீண்ட நாளைய கனவு நிறைவேறும். பறவைக-ளிடம் அன்பு அதிகரிக்கும். கலவரமான சூழ்நிலை காணப்படும். தாய்வழி உறவில் விரிசல் ஏற்படும். அலைபேசி தகவல் அலைச்சல் தரும். பணவரவு பாகப்பிரிவினை ஏற்படுத்தும். புதுமையை விரும்புவீர்கள். பொதுப்பணியில் ஆர்வம் கூடும். பழைய பகை தீரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T




**மீனம்:** மங்களச் செய்தி வரும் வாரம். விருந்தினர் வருகை உண்டு. பொறாமைகள் விலகும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் அதிகரிக்கும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். வேலை பளு அதிகரிக்கும். பித்ருக்கள் சாபம் நீங்கும். சேமிப்பு உயரும். திறமைகள் வெளிப்படும். பழையக்கடன் அடையும். பணவரவு அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். இடமாற்றம் நன்மை தரும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பங்குச்சந்தை லாபம் தரும். செல்வாக்கு மேம்படும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கூடும். காதலர்கள் தம்பதியாவார்கள். மாணவிகளுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். தர்ம சிந்தனை மேலோங்கும். பேச்சில் பணிவு தேவை. தொழில் அபிவிருத்தி அடையும். பழையக்கடன் வசூலாகும். வாக்குவாதத்தைத் தவிர்ப்பது நல்லது. திடீர் பயணம் உற்சாகம் தரும். நல்லோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். வம்பு தும்புகள் ஒழியும். பாதிப்புக்கள் அகலும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். பெற்றோர் உடல்நிலையில் கவனம் தேவை. உறவினர்களின் அன்பு அதிகரிக்கும். திருமண முயற்சி பலன் தரும். பெண்களுக்கு பதவி உயர்வு கிட்டும். மகிழ்ச்சியான செய்தி வரும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தன்னம்பிக்கை அதிகமாகும். புகழும், பொருளும் பெருகும். நண்பர்கள் உதவி கிட்டும். புதிய முயற்சி கை கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: பைரவர், அதிர்ஷ்ட எண்: 4,9,2,6
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,C

---

# ஐயப்பன் கோவில் ஜோதிவிழா



ஐயப்பன் கோவில் அழகிய மேடையில்
ஆரம்பம் ஆனது ஜோதிவிழா
மயக்கும் வகையிலே மைதானம் இருந்ததே!
மூத்தோர் இளையோர் கூடினரே!
பார்க்கும் இடமெலாம் பாவையும் காளையும்
பலவித ஆடையில் இருந்தனர்
சோர்விலாத் தொண்டர் சுழன்று உழைத்தனர்
சாரியாய் மக்கள் வந்தனரே!

சுடச்சுடக் காரம் சுண்டற் கடையும்
சூடாய்க் கோப்பீப் பானமும்
கடகடாச் சத்தமாய் கொத்து றொட்டியும்
காண்போர் கண்களைக் கவர்ந்தது
அவித்த மரவள்ளி அதனுடன் சம்பல்
ஆவி பறக்கும் தோசை
குவித்து வைத்த கச்சான் கடலை
குறியாய் வாங்கி உண்டனரே!

பகட்டுப் பளபள பட்டுக் கடையிலே
பாவையர் எல்லாம் நிரம்பினர்
நகர முடியா நெருங்கி நின்றே!
நயமாய் வாங்கிக் குவித்தனர்
பொட்டும் மாலையும் பொருந்தக் காப்பும்
பாவாடை சட்டையும் வாங்கியே!
விட்டுக் கொடுக்கா விலைகள் பேசியே!
விதமாய் வாங்கிக் கொண்டனரே!

பக்திப் பாட்டும் பலவித நடனமும்
பார்ப்பவர் கண்களைக் கவர்ந்ததே!
பக்க வாத்தியப் பக்கத் துணையுடன்
பாரதப் பாடகர் பாடினர்
இரண்டு நாட்கள் இனிமையாய் நடந்ததை
எப்போ வருமென ஏங்கினரே!
வருடம் ஒருமுறை வந்திடும் திருவிழா
விரும்பிப் பார்க்கும் பெருவிழாவே!

---

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

# MORTGAGE
## FINANCIAL SOLUTIONS

COMMERCIAL · RESIDENTIAL · VACANT LAND · INDUSTRIAL · CONSTRUCTION



## OUR SERVICE

- Purchase
  - Builder Purchase
  - MLS Purchase
  - Private Purchase
- Equity line of Credit
- Refinance
- Renewal



CALL US

**NESAN**
**416-908-5656**

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

www.nesan.ca

**WE DEAL WITH ALL BANKS**

CityCan Financial Corporation
NESAN SUBRAMANIAM
Mortgage Agent level 1 Licence # M15001465
CityCan Financial Corporation, Brokerage #10332

Scotiabank · TD Canada Trust · National Bank · RFA · First National Financial LP · Manulife · Desjardins · MCAP · Home Trust · Equitable Bank · radius financial · RMG mortgages

**55 EGLINTON AVE E SUITE 604, TORONTO, ON M4P 1G8**









26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்






உதயம் 1532 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday August 15, 2025

# "பல்லின சமூகங்களோடு இணைந்து அரசியல் மற்றும் சமூக மட்டத்தில் சேவையாற்றி வரும் வேட்பாளர் நீதன் சண்முகராஜாவே ரொறன்ரோ 25ம் வட்டாரத்தின் அங்கத்தவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு பொறுத்தமானவர்"

## நீதன் சண்முகராஜாவின் தேர்தல் பிரச்சார தொடக்க நிகழ்வில் பல உரையாளர்கள் அழுத்தமாகத் தெரிவிப்பு



""கனடாவில் ஸ்காபுறோ நகரின் மத்தியில் பல ஆண்டுகளாக வாழ்ந்த வண்ணம். கல்வி கற்று பட்டம் பெற்று பின்னர் தமிழ்ச் சமூகத்தோடும் பல்லின சமூகங்களோடும் இணைந்து தொடர்ச்சியாக அரசியல் மற்றும் சமூக மட்டத்தில் சேவையாற்றி வரும் வேட்பாளர் நீதன் சண்முகராஜாவே ரொறன்ரோ மாநகரின் 25ம் வட்டாரத்தின் அங்கத்தவராக தேர்ந்தெடுக்கப்படுவதற்கு பொறுத்தமானவர். இதற்கு மற்றுமமொரு காரணம் அவர் முன்னர் இதே நகரசபை வட்டாரத்தின் அங்கத்தவராகத் தேர்ந்தெடுக்கப்பெற்று பல ஆக்கபூர்வமான பணிகளை மக்களுக்காக ஆற்றியவர்"

இவ்வாறு கடந்த செவ்வாய்கிழமையன்று ஸ்காபுறோவில் நடைபெற்ற நீதன் சண்முகராஜாவின் தேர்தல் பிரச்சார தொடக்க நிகழ்வில் பல உரையாளர்கள் அழுத்தமாகத் தெரிவித்து உரையாற்றியதோடு மாத்திரமன்றி சுமார் 25 ஆயிரம் டாலர்கள் அளவில் நிதியை சேகரித்தும் ஆதரவளித்தன. அங்கு திரளாகச் சமூகமளித்த ஆதரவாளர் நீதன் சண்முகராஜா அவர்களின் வெற்றிக்காக உழைப்போம் எனவும் உறுதியளித்தனர்.

# "நம்மை தாமதமாக வந்தடையும் முதுமை என்பது ஒரு பெருமைக்குரிய பராயம் என்பதை உணரவேண்டும்"

## மார்க்கம் – மிடில்பீல்ட் தமிழ் மூத்தோர் சங்கம் நடத்திய ஒன்றுகூடலில் உரையாற்றிய "உதயன்" லோகேந்திரலிங்கம் புகழாரம்



"நாம் பிறக்கும் நாளிலிருந்து சில பராயங்களைக் கடந்த வண்ணம் வாழ்க்கையை அனுபவித்து வாழும் நம்மை இறுதியில் அணைக்கின்ற பராயம் தான் முதுமை. இவ்வாறு பல வருடங்களைக் கடந்து தாமதமாக வந்தடையும் முதுமை என்பது ஒரு பெருமைக்குரிய பராயம் என்பதை உணரவேண்டும். காரணம் "மூத்தோர் சொல்லும் முது நெல்லிக் கனியும் முன்னால் கசக்கும் பின்னால் இனிக்கும்" என்ற கூற்றுக்கு இணங்க மூத்தோரின் அறிவுரைகளை நிதானமாகக் கேட்டு நடந்தால் நன்மையே நிகழும் தவிர தீது ஒன்றும் இல்லை."

இவ்வாறு. 14ம் திகதி வியாழக்கிழமை மதியம் மார்க்கம் நகரில் அமைந்துள்ள "அனி" சன சமூக நிலைய கூட்ட அறையில் மார்க்கம்- மிடில்பீல்ட் தமிழ் மூத்தோர் சங்கம் நடத்திய ஒன்றுகூடலில் உரையாற்றிய "உதயன்" லோகேந்திரலிங்கம் அங்கு கலந்து கொண்ட மூத்தோர் மற்றும் சங்கத்தின் முக்கிய உறுப்பினர்கள் மத்தியில் தெரிவித்தார்.

(தொடர்ச்சி 15ம் பக்கம்)

# "இன அடிப்படையிலான போர் செய்த இலங்கை இராணுவ சிப்பாய்களின் மனங்களில் இனவாதம் தொடர்ந்தும் தங்கி இருக்கின்றது. எனவே வெள்ளிக்கிழமை ஹரத்தாலை ஆதரிக்கிறோம்"

## த.மு.கூ தலைவர் மனோ கணேசன் அறைகூவல்



"இராணுவ பிரசன்னம் குறைப்பு" என்பதுதான் இந்த ஹர்த்தால் சொல்ல போகும் செய்தி. போர் செய்த இராணுவம் சும்மா இருக்காது. அதிலும் இன அடிப்படையிலான போர் செய்த இராணுவ சிப்பாய்களின் மனங்களில் இனவாதம் தங்கி இருக்கத்தான் செய்யும். எனவே அவர்களை தென்னிலங்கைக்கு கொண்டு வந்து, "குளம் வெட்டுவது, குளத்தில் தூர் எடுப்பது, வீதி அமைப்பது, வீடு கட்டுவது, ஹோட்டல் நடத்துவது, தோட்டம் செய்வது, காய்கறி சந்தை நடத்துவது" போன்ற இன்ன பிற அபிவிருத்தி பணிகளில், ஜனாதிபதி பாதுகாப்பு அமைச்சர் அனுர குமார திசாநாயக்க, ஈடுபடுத்த வேண்டும்.

இந்த சம்பவத்தை அடிப்படையாக கொண்டு "நீதியான விசாரணை", "வடகிழக்கில் இருந்து மேலதிக இராணுவம் குறைப்பு" ஆகிய கோரிக்கைகளை முன்வைத்து வெள்ளிக்கிழமை நடத்தும் முழு அடைப்பு என்ற ஹர்த்தாலை தாம் ஆதரிக்கிறோம் என தெரிவித்துள்ள தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் மேலும் கூறி உள்ளதாவது

(தொடர்ச்சி 6ம் பக்கம்)